Bishop George Rajendran sdb
DIOCESE OF THUCKALAY

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District - 629175
Tamil Nadu, India

## BISHOP'S ENGAGEMENTS
January 2015

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Thu | 10.00 am | Mezhacode: Aanawaadhil blessing |
| 2 | Fri | 9:00 am<br>7:00 pm | Visit to Bro. Christudas, Marthandam<br>Silver Jubilee of Ordination of Bp Vincent |
| 3 | Sat | 7:00 am<br>3:00 pm | Foundation stone blessing: CMC region, Thuckalay<br>Chavara, Evuprasiamma Celeb: Finance Committee |
| 4 | Sun | 12.00 | Kumarakom: Engagement Mass |
| 5-10 | | | SYNOD |
| 11 | Sun | | Koratti: Holy Qurbana |
| 13 | Tue | 9:30 am<br>4:00 pm | Priest Conference<br>Christurajapuram: School Day |
| 14 | Wed | 6:00 pm | Salem: Mass in Cathedral |
| 15 | Thu | 9:00 am<br>5:00 pm | Pastoral Council<br>Anayadi: Blessing of Renovated Church |
| 16 | Fri | 4:00 pm | Pongal Celebrations with Thuckalay Friends |
| 17 | Sat | 5:00 pm | Shenkottai: Welcome to FCC Sisters |
| 18 | Sun | 10;00 am<br>1:30 pm | Thakkalivilai: Feast Day Holy Qurbana<br>Kalluvilai: Family Year Conclusion |
| 19 | Mon | 10:30 am | Anayadi: SJSM Convent Blessing |
| 21 | Tue | 4:30 pm | Padanthalumoodu: Annual Day Celebrations |
| 22 | Wed | 5:00 pm | Colachel: School Day |
| 23 | Thu | 10:00 am<br>4:00 pm | Soosaipuram: Marriage Mass<br>Nagercoil: Alphonsa School Day |
| 24 | Fri | | Changanassery: House Blessing |
| 25 | Sun | 2:30 pm | Mission League Rally |
| 26 | Mon | 10:00 am | Ernakulam: Marriage Mass |
| 27 | Tue | | Fathers Picnic |
| 28 | Wed | 9:30 am<br>4:00 pm | Curia Meeting<br>Pala: Feast Day Mass |
| 30 | Fri | | Personal Recollection |
| 31 | Sat | | Bishop's House: Feast of St. John Bosco |

*Fr. K. J. Antony SDB*
*Diocese Secretary*

**இறையருள் செய்திகள் மற்றும் விமர்சனங்களுக்கு**
**iraiarultkly@gmail.com**





# இறையருள்
# IRAIARUL

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 19 No : 1 January 2015

## Editorial Board

**Patron**
His Excellency
**Mar George Rajendran SDB**

**Chief Editor**
**Fr. Joseph Santhosh**

**Executive Editor**
**Mr. Soundara Raj**

**Associate Editors**
**Fr. K.J. Antony SDB**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay.**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| திருத்தந்தையிடமிருந்து... | 2 |
| ஆயர் திருமுகம் | 4 |
| நற்செய்தி நிலையம் | 9 |
| மிஷன் லீக் | 10 |
| குழந்தை ஈசோ | 11 |
| இளைஞர் இயக்கம் | 14 |
| வின்சென்ட் தே பவுல் சபை | 16 |
| அருட்தந்தையர்களின் கிறிஸ்மஸ் | 19 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 20 |
| நற்செய்தி அறிவிப்பு நிதி | 22 |
| Birthdays and Feastdays | 24 |
| முதலாண்டு நினைவில்... | 25 |
| விழுதுகள்-5 | 26 |
| தக்கலை தீபம்-7 | 35 |
| வரலாறு அறிவோம்-8 | 39 |
| குமரியில் உதயமாகும்... | 46 |
| Bishop's Engagements | 48 |

திருத்தந்தையின் கிறிஸ்து பிறப்பு தின மறையுரை

"காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்: சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது."(எசா 9:2) "ஆண்டவருடைய தூதர் அவர்கள்முன் வந்து நின்றபோது



ஆண்டவரின் மாட்சி அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது." (லூக் 2:9) ஆழ்ந்த இருளை ஊடுருவிச் செல்லும் ஒளியாக மீட்பர் பிறந்துள்ளதை இன்றைய வழிபாடு நமக்கு உணர்த்துகிறது. ஆண்டவரின் பிரசன்னம், தோல்வியின் சுமை, அடிமைத் தனத்தின் வருத்தம் ஆகியவற்றை நீக்கி, மக்கள் நடுவே, மகிழ்வையும், ஆனந்தத்தையும் உருவாக்குகிறது.

இவ்வுலகம் இருளால் சூழப்பட்டிருக்கும் இவ்வேளையில், நாம் விசுவாசத்தின் சுடரால் ஈர்க்கப்பட்டு, கடவுளின் இல்லத்திற்கு வந்துள்ளோம். குழந்தையாய்ப் பிறந்துள்ள இந்த ஆதவனைத் தியானிக்க நம் உள்ளங்களைத் திறப்போம். காலத்தின் துவக்கத்திலிருந்தே இருள் இவ்வுலகை மூடிவந்துள்ளது. தன் உடன்பிறப்பின் மேல் கொண்ட பொறாமையால், காயின், ஆபேலைக் கொன்ற நாள் முதல், வன்முறை, வெறுப்பு, போர், அடக்குமுறை ஆகிய தீமைகளால் மனித வரலாறு காயமடைந்துள்ளது.

இந்த வரலாற்றுப் பாதையில், பொறுமையுடன் காத்திருக்கும் தந்தையின் அன்பு, இருளையும், அநீதியையும் வெல்லும் வகையில் ஒளிர்கின்றது. பொறுமையிழந்து வெடிப்பது விண்ணகத் தந்தையின் குணம் அல்ல. காணாமற் போன மகனின் வருகைக்காகக் காத்திருந்த தந்தையைப் போல, அவர் காத்திருப்பவர். இறைவாக்கினர் எசாயா



முன்னறிவித்த ஒளி, பெத்லகேமில் பிறந்து, மரியா மற்றும் யோசேப்பு ஆகியோரின் கரங்களில் தவழ்ந்தது. இடையர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

"குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம்"(லூக் 2:12)என்று தூதர்கள் அறிவித்தனர். அவர்கள் சொன்ன 'அடையாளம்' கடவுள் கொண்ட தாழ்ச்சியின் மிகத் தாழ்ந்ததோர்



அடையாளம். உலகினர் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருந்த கடவுளின் மென்மையான குணம், இவ்வகையில் வெளியானது.

குழந்தையாகப் பிறந்து, தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டுள்ள இக்குழந்தையைப்பற்றி சிந்திப்பதற்கு நாம் அழைக்கப்படுகிறோம். நாம் இறைவனைத் தேடிச் செல்வதற்குப் பதில், இறைவன் நம்மைத் தேடி வருவதை நாம் உணர்கிறோமா? நம்மை அவர் தேடிக் கண்டுபிடிக்க அனுமதிக்கிறோமா?

மாடடையும் தொழுவத்தில் பிறந்துள்ளவர், தற்பெருமை கொண்டோரைத் தேடாமல், எளிய மக்களைத் தேடிச் சென்றதைச் சிந்திக்கிறோம். இந்தத் தொழுவத்தை நெருங்கி வந்து, "மரியே, எங்களுக்கு இயேசுவைக் காட்டும்' என்று கன்னித்தாயை வேண்டுவோம் என உரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

# ஆயர் கடிதம்

தக்கலை மறைமாவட்ட ஆயர், குருக்களுக்கும் இருபால் துறவியருக்கும், பொதுநிலையினருக்கும் எழுதுவது.

குழந்தை இயேசுவின் வருகைக்காய்க் காத்திருக்கும் இந்நாட்கள் ஆசீர்வதிக்கப்பட்ட நாட்களாக அமைய வாழ்த்துகிறேன்.

*ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்,*
*உலகெங்கும் வாழ்வோரே, ஆண்டவரை போற்றிப்பாடுங்கள்,*
*ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்,*
*அவர் பெயரை வாழ்த்துங்கள்,*
*அவர் தரும் மீட்பை நாள்தோறும் அறிவியுங்கள்.*
*பிற இனத்தாருக்கு அவரது மாட்சியை எடுத்துரையுங்கள்,*
*அனைத்து மக்களினங்களுக்கும்*
*அவர்தம் வியத்துகு செயல்களை அறிவியுங்கள் (திபா 96: 1-3).*

குழந்தை இயேசு பிறந்த இரவு வேளையில் விண்ணகத் தூதர் பேரணி, “உன்னதங்களில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக” (லூக் 2: 14) என்று புகழ்ந்தது. இது, ஆண்டவர் தரும் மீட்பு மனிதரை வந்தடைந்ததன் பேருவகை. நாம், ஆண்டவரைப் போற்றிப் புகழ்வோம்! ஏனெனில், அவர் தம் மக்களை கண்ணோக்கி மீட்பதற்காக வந்துள்ளார். அவரே நம் மீட்பு; நாம் அக்களிப்போம், அகமகிழ்வோம்!

ஆண்டவர் தரும் மீட்பே நமது நம்பிக்கை. ஆண்டவர் தரும் மீட்பின் வருகையை ஒருவர் உள்ளார உணரும் போது, “ஆண்டவரே உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர்” (லூக் 2: 29) என்று சிமியோனுடன் அவரால் கூற இயலும்.நாம் அன்போடும் மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்குள் ஆழமான அர்த்தங்கள் அடங்கியுள்ளன. இது வெறுமனே ஒரு வாழ்த்துச் சொல் அல்ல, மாறாக, அன்று வானதூதர்கள் அறிவித்ததை இன்றைய தினம் நாம் பிறருக்கும் உலகிற்கும் அறிவிக்கிறோம்.

1. முதலாவதாக, இன்றைய உலகில் நம்பிக்கையின் தூதர்களாக மாற நாம் அழைக்கப்படுகிறோம். நம்பிக்கை இழந்து,





மனம் உடைந்து போயிருப்போர் இன்றைய உலகில் ஏராளம். இலட்சியம் இன்றி, தற்காலிக இன்பங்களைத் தேடும் ஒன்றாக வாழ்க்கை பல வேளைகளில் பார்க்கப்படுகிறது. வாழ்வைத் தாங்கி நிறுத்தும் வாழ்வின் அடிப்படைகள் ஆழமற்றனவாய் மாறிவிடுகின்றன. நிரந்தரமற்றவை நிரந்தரமானவைகளாக பார்க்கப்பட்டு அவற்றையே சார்ந்து வாழ்வது இன்று சாதாரணமாகிவிட்டது. உடனடித் தீர்வுகளும், சந்தர்ப்பவாத ஒத்துப்போகுதலும் இன்று வாழ்வின் அம்சமாகிவிட்டது. ஆனால், பரிதாபம்! கடவுளை தேடுவதற்காக படைக்கப்பட்ட இதயம் கண்விழித்துப் பார்க்கும் போது, இருள்படர்ந்த பாதையில், திராணியற்று, வாழ்க்கை பாதைமாறிப் பயணம் செய்கிறது என்பதை உணர்கிறது. இங்கே வாழ்க்கை கதிகலங்கி நிற்கிறது.

2.நம்பிக்கை பிறந்துள்ளது என்பதை கிறிஸ்மஸ் நமக்கு உணர்த்துகிறது. கிறிஸ்துவால் பாதைகள் செம்மையாக்கப்பட்டுள்ளன. முன்செல்ல வேண்டிய பாதை ஆயத்தமாய் உள்ளது. வருங்காலத்தைக் குறித்த கலக்கங்கள் இனி தடைகளாகாது. “அஞ்சாதீர்கள்” என்பதே இடையர்களுக்கு வான தூதர்கள் கொடுத்த செய்தி (லூக் 2: 10). ஆண்டவர் தம் வாக்குறுதிகளில் நம்பிக்கைக்குரியவர். அச்சம் களைந்து நம்பிக்கையோடு வாழும் ஒரு காலத்திற்கு நம்மை அவர் அழைத்துச்செல்கிறார். நம்பிக்கை இழக்காதவரே கிறிஸ்தவர். கில்பர்ட் பீங்கன், “பிறமனிதர்கள் நம்பிக்கையற்ற முடிவை எதிர்நோக்கும் போது, கிறிஸ்தவரோ, முடிவற்ற நம்பிக்கையைக் கண்டு அகமகிழ்கிறார்” என்று கூறுகிறார். நம்பிக்கை உடையவர் பாதை தவறுவதில்லை. நம்பிக்கையின் இந்நற்செய்தியை நாம் அனைவருக்கும் பறைசாற்ற வேண்டும், அது அனைவரையும் சென்றடையவும் வேண்டும். இன்றைய உலகில், நமது நடவடிக்கைகள், நாம் மேற்கொள்ளும் கிறிஸ்தவ வாழ்வு ஆகியவற்றின் வாயிலாக நம்பிக்கையின் நற்செய்தியை நாம் பறைசாற்றிய வேண்டிய பொறுப்பு உள்ளது.

3.இரண்டாவதாக, இன்றைய உலகில் அமைதியின் தூதர்களாக மாற நாம் அழைக்கப்படுகிறோம். உலக நாடுகள் பாதுகாப்பு கலன்களை நாள்தோறும் பெருக்கிக் கொண்டிருக்கின்றன. அமைதியை பாதுகாக்க நமக்கு இன்று அமைதிப் ‘படை’ தேவைப்படுகிறது. இவை ஒன்றும் நமக்கு

புதிதல்ல. அமைதி, நீதி ஆகியவற்றின் அடிப்படைகள் மறக்கப்படும் சூழல் இன்று உலகளாவ காணப்படுகிறது. கிறிஸ்து பிறப்பானது, திருமண ஒப்பந்தமான இருவரிடமிருந்தே தொடங்குகிறது. யோசேப்பு 'நேர்மை'யாளராக இருந்தார். சக மனிதர்களோடும் கடவுளோடும் இணங்கி வாழ்ந்தார் என்பதையே 'நேர்மையாளர்' என்னும் வார்த்தை இங்கே குறிக்கிறது. மரியாவோடும் இணக்கத்திலேயே யோசேப்பு வாழ்ந்தார். ஆனால், மரியா கருவுற்றதும் அமைதி குலையும் நிலை ஏற்படுகிறது. ஆனால் யோசேப்பு தான் இழந்த மன அமைதியை திரும்பப் பெறுகிறார். திருச்சட்டம் வலியுறுத்திய நீதியை அறிந்திருந்த யோசேப்பு மரியாவை காட்டிக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், கடவுளின் கருணையையும் மனித நேயத்தையும் வாழ்ந்தறிந்த யோசேப்பு மரியாவை மறைவாக விலக்கிவிடவே நினைக்கிறார். இதனாலேயே, யோசேப்பு நேர்மையாளர் என்னும் நிலைக்கு தகுதி பெறுகிறார் (மத் 1: 19). சட்டங்கள் அவசியமாக நீதியை ஏற்படுத்தும் என்பது இல்லை. மனிதநேயம் தோய்ந்த சட்டங்களே, அமைதியையும், நீதியையும் ஏற்படுத்தும். இத்தகைய மனித நேயம் கலந்த அமைதியானச் சூழலில் தான் கிறிஸ்து பிறக்க முடியும்.

இன்றைய உலகில் அமைதியின் தூதர்களாக மாற நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நீதியை ஊக்குவிப்பவர்களாக நாம் மாற வேண்டும் என்பதே இதன் அடிப்படையான செய்தி. இந்நீதியானது, "கண்ணுக்குக் கண்" என்னும் ஹமுராபியின் சட்டத்தின் வரயறைகளை தாண்டிச் செல்ல வேண்டும், இல்லயேல், முழு உலகமும் பார்வையற்றதாய் மாறிவிடும். இயேசு இன்றைய உலகில் உண்மையாகவே பிறக்க வேண்டுமாயின், மனிதர்கள் 'கடவுளையும் அடுத்திருப்பவரையும் அன்பு செய்ய வேண்டும்' (மத் 22: 37-39) என்னும் அன்பின் இரட்டைச்சட்டத்தை கடைப்பிடித்தாக வேண்டும். இதுவே இயேசுவின் வாழ்வும் நமக்கு உணர்த்தும் செய்தி. கடவுளை முழுமையாக அன்பு செய்த இயேசு அவருக்கு முழுமையாக கீழ்ப்படிந்து, மனித மீட்புக்காகத் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார் (கலா 1: 4). அடுத்திருப்பவரை அன்பு செய்யும் நல்லசமாரியனாக இயேசு மாறினார். இன்று, கிறிஸ்துவின் பிறப்பின் வழியாக, கடவுளோடும் அடுத்திருப்பவர்களோடும் நமக்கு நல்லுறவு ஏற்படுகிறது (உரோ 5: 1; எபே 2: 14). மன்னிப்பாலும் ஒப்புரவாலும் ஏற்பட்ட கனியே அமைதி.

4.மூன்றாவதாக, இன்றைய உலகில் அன்பின் தூதர்களாக மாற நாம் அழைக்கப்படுகிறோம். ஆதிப்பெற்றோரின் ஆணவம், முதல் வீழ்ச்சிக்கு காரணமாயிற்று. படைப்பு, குறிப்பாக மனிதப் படைப்பு கடவுளின் அன்பின் வெளிப்பாடு. கடவுளை நோக்கி வாழ்ந்த மனிதர், இலக்கை மாற்றி, தங்களையே நோக்கத் தொடங்கினர். தற்புகழ்ச்சி, தன்னையே முதன்மைப்படுத்தி தன்னையே வழிபடுதல், போன்றவை ஆணவத்தின் அடையாளங்களே ஒழிய உண்மையான சுய அன்பின் வெளிப்பாடுகள் அல்ல. இவையே மனிதம் தொலைத்த செயல்பாடுகளுக்கு வித்திட்டுள்ளன. கடவுளின் அன்பு பொதிந்த முழு வாழ்வை நோக்கிப் பயணம் செய்ய வேண்டும் என்பதை மனிதர்கள் மறந்து, சுயம் நிறுவுதல் என்பதை குறிக்கோளாக கொண்டு சுயத்தை மையமாகக் கொண்ட செயல்களை முன்னெடுக்கின்றனர். தனிமனிதரின் ஆசைகள், சமூகத்திலும் தொற்று நோயாய் மாறி, அரசுத்திட்டங்களிலும் பிரதிபலிக்கிறது. மனித வாழ்வின் மாண்பை மதியாமல், கருக்கலைப்புக்கும், ஓரின திருமணத்திற்கும், ஏழை மக்களின் அழிவிக்கும், சாதகமான சட்டங்களுக்கு அரசும் வடிவம் கொடுக்கிறது.

கிறிஸ்மஸ் நமக்கு தரும் செய்தி இங்கே அழுத்தம் பெறுகிறது. படைப்பின் நோக்கம் குறித்து ஆழமாய் சிந்திக்க அழைப்பு விடுக்கிறது. சுயநலம் தாண்டிய அன்புறவில் வாழவே நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். இதுவே கடவுள் நமக்கு விடுக்கும் அழைப்பு. உண்மையான அன்பில் தற்புகழ்ச்சிக்கு இடம் இல்லை. 'கடவுளோடு இணையாயிருக்கும் மாட்சியைக் களைந்து, சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டு மனிதராகப் பிறந்த' இயேசுவையே நம்மால் வரலாற்றில் காணமுடியும். இவர் தரும் அன்பின் பாடம் நாம் ஏற்க வேண்டும்.

5.பாவத்தின் இருளுக்குள் உலகம் அமிழ்ந்து கொண்டிப்பதை நம்மால் காண இயலும். காரணம், இயேசுவை வாழ்வில் பலரும் ஏற்கவில்லை; அவர் கொண்டு வந்த வாழ்வின் ஒளியானது

பலருடைய இதயத்தில் ஆழமாக பதியவுவில்லை. புனித யோவான் நற்செய்தியில் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம், "அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்துகொண்டிருந்தது. ஒளியான அவர் உலகில் இருந்தார். உலகு அவரால்தான் உண்டானது. ஆனால் உலகு அவரை அறிந்து கொள்ளவில்லை" (யோவா 1: 9-10).

கிறிஸ்மஸ் நாளில், ஒளியான இயேசு உலகிற்கு வந்தார். 'அவரிடம் நம்பிக்கைக்கொண்டு, அவரை ஏற்று, கடவுளின் பிள்ளைகள் ஆகும்' (யோவா 1: 12) சுதந்தரம் நம்மிடம் தரப்பட்டுள்ளது. கடவுளின் மகனாக இயேசு பிறந்தார். இன்று அந்த மகன் வழியாக கடவுளின் பிள்ளைகளாகும் உரிமை நமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதனால், கிறிஸ்மஸ், கிறிஸ்துவின் பிறப்பு மட்டுமல்ல, அத்தோடு, நாம் கடவுளின் மகன்களும் மகள்களும் ஆகும் சந்தர்ப்பமுமாக அமைந்துள்ளது. இயேசுவில் நம்பிக்கைக் கொண்டு, அவரால் புதுப்படைப்பு ஆகும் போது, நம்மால் அவரது அன்பையும், மகிழ்ச்சியையும், அமைதியையும் அனுபவிக்கவும் பகிரவும் இயலும். அப்போது, இருளை நோக்கி தடுமாறும் உலகில் நம்மால் நம்பிக்கையின் கலங்கரை விளக்குகளாக சு ட ர் வி ட முடியும்.

அமைதியான இரவில், அஞ்சி கலங்கி நிற்கும் நம் மனங்களில் அன்பும், அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த இருள் களையும் விளக்காக மழலை இயேசு வருகிறார். அவரை வரவேற்க நாம் தயாரா? கிறிஸ்மஸ் தரும் செய்தியை பறைசாற்ற தயாரா? நம்மை மீட்க வந்த பாலகரின் ஆசீகளை உங்களுக்கு அளிப்பதோடு, அனைவருக்கும் மனமகிழ்ச்சியின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.

+மார் ஜார்ஜ் ராஜேந்திரன் ச.ச.
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

**Pope Francis**
# TWEETS



**Pope Francis** @Pontifex Jan 1
How many innocent people and children suffer in the world! Lord, grant us your peace!



## Bishop's Letter

27 November 2014

Dear Fathers and Brothers,

Affectionate greetings from Rome!

I reached here on 11th November to take part in the canonisation of Bl. Chavara and Bl. Euphrasia and also to meet our fathers and brothers who are doing higher studies at Rome.

**CANONISATION OF BL. CHAVARA AND BL. EUPHRASIA**

It was a proud moment for the Indian Church and especially for all of us in the Syro-Malabar Church when two of our members were raised to the glory of the altar as Saints of the Catholic Church on 23 November. I could personally be present and be a witness to such a great historic event for the Church in India, more especially to our Syro-Malabar church.

I am sure most of you had watched the entire program of the canonisation live on TV and also had special prayers and commemoration on that day. St. Peter's Square wore a festive look with thousands of people from all over the world who had come to witness the event. The Church in India was well represented by central and state Government representatives, Cardinals, Bishops, Priests, Religious and the Faithful.

Besides our two saints from India, our beloved Pope Francis canonised also four Italians on that day. They were St. Giovanni Antonio Farina, and three Franciscans, St. Ludovico da Casoria, St. Nicola da Longobardi, and St. Amato Ronconi. About the newly declared saints the Pope said, "They responded with extraordinary creativity to the commandment of love of God and neighbour."

Our response to our own priestly calling is also the same. It is to fulfil this command of Christ with extraordinary creativity. We have responded because we love God and love our neighbour. *One who*

*has love is necessarily creative!* We are priests with love; we are leaders with creativity and initiatives.

In this circular I would like to share some reflections on our priestly leadership.

**PRIESTLY LEADERSHIP – LEADERSHIP WITH A DIFFERENCE**

Whether we desire or not the very fact of becoming a Catholic priest demands of us leadership. It is a leadership that requires of us to build up, sustain, and contribute to the growth of Christian communities. Primarily these demands arise from our own membership of the Kingdom of God to which everyone is invited. This reality in fact broadens the scope of our membership, our calling to the priesthood and leadership.

(i) One among the Disciples – Carrying the Cross

The fact of Jesus humbling himself (Phil 2:8) to become one among us (Jn 1:14) is both an example and the sure way of becoming a leader in a Christian community. This is the servant-leadership prophesied by Isaiah (Is 42:1-4) and modelled by Jesus. In this model Jesus becomes a servant even to the extent of washing the feet of others (Jn 13:1-17), and even if they called him 'master,' he calls them friends (Jn 15:15).

We share the priesthood of Christ. Sharing the priesthood of Christ necessitates imitation of Christ. The Christian community and others may consider us priests, as masters and leaders with power. In fact in our present context in our diocese we are looked upon as persons invested with power.

So it was with Christ. Christ performed miracles, healed, chased away demons, and taught with authority. He was recognized as the King (Jn 12:13). Yet, his way of restoring the Kingdom of Israel was by the cross, letting himself be captured by power-mongering Jewish priests, scribes and Pharisees. To be a disciple of Christ is to take up one's cross and follow him (Mt 10:38; Lk 9:23) – he who was the suffering servant of Yahweh.



We priests are at first disciples before we are Apostles or Priests. As Disciples of Christ and his imitators we take up our daily cross and follow him. Our crosses might be our loneliness, our unfulfilled desires and wants, problems that arise from our apostolate, our relationships, and our personal problems and so on. But we can be comforted because the one who accompanies is Christ, who himself experienced hunger, denial, betrayal, rejection, suffering, crucifixion, and death.

(ii) Journeying together – Personal accompaniment

Our journey of course is not just with Christ alone but along with our fellow Christians – our brothers and sisters in Christ. Thus we priests can have the attitude of St. Augustine who said of himself: "For you I am a Bishop; but with you I am a Christian."

Accompaniment of a Christian community would mean more than mere shepherding. It is to remember that we are His sheep before we are shepherds, His disciples before we are teachers (Lk 6:40), His servants before we are kings and princes or the Royal Priesthood! It is true that we are a committed group set apart, but only after obtaining the basic membership of the chosen race! (1Pet 2:9).

In the words of St. Josemaria Escrivá, "a priest doesn't go to Heaven alone: he always goes in company with many more souls." We are friends and neighbour who care for those who have been entrusted to us. We care for them primarily by enriching them with our lived-out spirituality. We bring them power and blessings of God through the sacramental signs and celebration, through our prayers for them, and in and through our pastoral charity.

'Charity,' here, we should note, is pastoral. Definitely it is not a charity born of condescension. It is a charity born by the experience of the sheep who himself is cared for and loved by the One Who called him. In our Christian parlance, only the true and good sheep can become a caring shepherd.

Having said these, then I wish to emphasise, that our priestly leadership is one of accompaniment. While we ourselves are being led by the Lord who is our Shepherd, we in turn learn to become worthy shepherds.

Without robbing the primary sense and truth of the words of the Psalm 23 can we make ourselves worthy enough for the words to be applied to us priests also? Can the people tell about us: This priest is my shepherd... there is nothing I shall want... he restores my soul... he heals me... and so on?

May I borrow the words of the philosopher Albert Camus who says, "Don't walk behind me; I may not lead. Don't walk in front of me; I may not follow. Just walk beside me and be my friend." This way of being friend will demand of us to be *with* those who are entrusted to us, our parishioners, the youth, and persons of particularised categories. How much of time do I spend *for* them? How much of time do I spend *with* them?

Soon we will celebrate the Solemn Feast of the Birth of our Lord Jesus Christ. The Emmanuel, the 'God-with-us,' is also the one 'dwelt among us.' Jesus our Chief Shepherd has shown us the way of personal accompaniment and he humbled himself to be born among us. My wish and prayer for us priests as we prepare for Christmas is that we learn to be shepherds by imitating Christ, gentle and humble of heart.

**Year of Consecrated Life / Year of the Religious 2015**

Pope Francis has proclaimed 2015 a Year of Consecrated Life, starting on 30 November, 2014, and ending on 2 February, 2016, the World Day of Consecrated life. As Cardinal Joao Braz de Aviz, the Prefect for the Congregation for Consecrated Life says, "It's a great time to grow and deepen the faith. Part of this is driven by the hope and the certainty that consecrated life will never disappear from the Church." The goals of celebrating this Year of the Religious will include, reflecting on the unique role religious men and women



have in the Church, everything from their charisms to their challenges.

**Feast of the Immaculate Conception**

We will be celebrating the Feast of the Immaculate Conception on 8th December. Our Blessed Mother accompanied Jesus not just as a silent spectator, nor merely as a concerned mother. She was the first disciple who awaited the final revelation in Jesus Christ; she was the first recipient of the Good News; she was the first person to experience within herself the first fruits of redemption taking shape. She was prepared by God Himself to be born as the Immaculate Vessel of Redemption. Today she is a loving mother to us all who are priests. We seek her daily guidance in all that we do. She is our mother who is conceived without original sin. She is our example and guide to live our priestly life of chastity. Let us pour forth our heart to her, all our needs, and anxieties, our joys and sorrows as we journey along carrying our crosses following Jesus. She is there ever ready to accompany us her sons.

Wish you all a very Happy Feast of the Immaculate Conception and a time of Holy Preparation for the Birth of Our Lord Jesus Christ.

Yours in Christ,

**+George Rajendran SDB**
Bishop of Thuckalay

## Our New Website

I am glad to see that many of our fathers and friends are visiting the newly designed website of our diocese. You can get to know all the recent happenings and news of the diocese from our website.

**Our website: www.thuckalaydiocese.org**

**Our Facebook page: www.facebook/thuckalaydiocese**

## Bishop's Letter

Ref. No. Priests/GR/36/2014

Dear Fathers,

I wish you all a very Happy Christmas and New Year.

I believe that all of us in our parishes celebrated in a fitting manner the Birth of our Lord Jesus Christ. I want to thank you for animating the people and for guiding the preparations for the celebrations. Many of you also had accompanied the youth for carol singing, in preparing the crib, decorations, and illuminations.

From 6th January we will be entering the Season of Epiphany (Denha). During this season we commemorate the Baptism of Jesus, Public Life, Divine and Human nature, His intimate relation with the Father, and the Holy Spirit, and His Self-Emptying Love. May this season help all of us priests and religious to re-dedicate our life to our mission and to Jesus.

In this circular I would like to share with you some news about events and activities that took place in our diocese in the Month of December 2014.

**FCC's new presence at Thavana, Shenkottai**

We are happy to invite the Sisters of the Franciscan Clarist Congregation to establish their religious community at Thavana, Shenkottai mission. Sisters from St. Thomas Province – Kanjirappally have come forward to collaborate with our mission diocese. They have already purchased a plot of land at Thavana. They will begin their initial mission work from a rented house. They will arrive on 15th January and will be given a formal welcome on 17th January in the presence of all the religious and priests of the Shenkottai mission. This is the fourth women-religious congregation to establish a community at Shenkottai mission. As we welcome the sisters to the



diocese we thank whole-heartedly Rev. Sr. Julie, Provincial Superior and the province for making a bold decision to work in the mission station.

**SJSM Convent Blessing**

As we are aware, the Congregation of Sisters of St. Joseph of Saint-Marc (SJSM) is already at Anayadi. Their convent building and the training centre are nearing completion. The buildings will be blessed and dedicated on 19th January at 10.30 am. I have requested the sisters to meet you personally and invite you for the blessing. Since they are a new congregation coming for the first time to our diocese, it will be appropriate for all of us fathers to be present for the blessing and welcome the sisters. Their apostolate will include parish ministry, nursery, and a dispensary. I would like to present to you a brief profile of their congregation.

The Congregation of Sisters of St. Joseph of Saint-Marc has its origin in 1845 at Saint-Marc in the region of Alsace, France. Fr. Pierre Paul Blanck the founder of the Congregation felt the need of a religious congregation for persons who have more preference for prayer and solitude. The Charism of the Congregation is "Perpetual Adoration of Jesus Christ in the Blessed Sacrament," lived out in the spirituality of the Eucharistic Adoration of Jesus Christ in the Blessed Sacrament, taking care of the sick and the poor, and help in the education of children. The Founder placed the congregation under the patronage of St. Joseph.

We welcome the sisters whole-heartedly to the diocese of Thuckalay.

**Vicar General's Office at Bishop's House**

To make it convenient and functional, our Vicar General Rev. Fr. Muttathupadam will have his office at the Bishop's House. From 1st January 2015, Rev. Fr. Jose Muttathupadam will be available during

the day time in the Bishop's house from 9.00am to 5.00pm. He will continue to be the Director of Sangamam.

**Pastoral Visits**

The Pastoral Visits to the parishes are already mentioned in the Annual Calendar of the Diocese. Kindly take note of the dates and prepare accordingly.

In order that I can spend more time with the people and to make the pastoral visit more convenient and effective, I recommend you to prepare in advance. Prior to the visit of the Bishop, the chancellor Rev. Fr. M. Christudas, will come to the designated parish to assess and verify the documents, cleanliness and maintenance of the church and the surroundings. The assessment form will be sent to you for information and the chancellor will fill the form and provide the report to me. The financial accounts are to be submitted to Rev. Fr. Mathew Mulangasseril regularly, and the same will be verified during the Chancellor's visit. During the Pastoral visit kindly present all the documents and financial statements for my perusal.

I request your cooperation in the year ahead. Through you dear fathers, our diocese is going to be blessed. Let us continue to share our love through our brotherliness, availability, and generosity.

May God Bless You All, Remembering you in my prayers,

Yours in Christ,

**+George Rajendran SDB**
Bishop of Thuckalay

**Pope Francis**
**TWEETS**



**Pope Francis** @Pontifex Dec 26
Let us pray today for all those who are persecuted for their Christian faith.



# நற்செய்தி நிலையம்

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற் 16:15)

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

## விவிலியக் கலை இலக்கிய விழா மறைவட்ட போட்டிகள்

2014-15ஆம் ஆண்டு விவிலியக் கலை இலக்கிய விழா மறைவட்ட போட்டிகள் டிசம்பர் 26 வெள்ளிக்கிழமை ஆறுகாணி மறைவட்டத்திற்கும், 27 சனிக்கிழமை நித்திரவிளை மறைவட்டத்திற்கும், 29 திங்கட்கிழமை தக்கலை பிலாங்காலை மறைவட்டத்திற்கும், 30 செவ்வாய்கிழமை மஞ்சாலுமூடு மறைவட்டத்திற்கும், 31 புதன்கிழமை படந்தாலுமூடு மற்றும் சூசைபுரம் மறைவட்டங்களுக்கும் நடத்தப்பட்டது. போட்டிகள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.00 மணி வரை 4 அரங்குகளில் நடைபெற்றது. நிறைவில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு ஒத்துழைத்த மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அருட்தந்தை ஜோசப் ஒட்டலாங்கல், அருட்தந்தை ஜேக்கப் ஜயமாத்திர, அருட்தந்தை றோபின் கூறுமுள்ளில், அருட்தந்தை செபி, அருட்தந்தை ஷோஜோ, அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் மற்றும் மறைவட்ட செயலர்கள் அருட்சகோதரிகள் அனிதா, தீபா, மேரி ஆன், பாவனா, ஜெய்சி, அல்போன்சா ஆகியோர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

## மறைமாவட்ட போட்டிகள்

மறைமாவட்ட போட்டிகள் ஜனவரி 15 வியாழக்கிழமை படந்தாலுமூடு மறைவட்ட ஆலய அரங்கில் நடைபெறும். மறைவட்ட போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள் கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறார்கள்.

## ஆசிரியர்களுக்கான போட்டிகள்

மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான போட்டிகள் மறைவட்ட அளவில் ஜனவரி 26 திங்கட்கிழமை படந்தாலுமூடு மறைவட்ட ஆலய வளாகத்தில் காலையில் மஞ்சாலுமூடு, படந்தாலுமூடு,

நித்திரவிளை ஆகிய மறைவட்டங்களுக்கும் மதியம்12.30 மணிக்கு மறைமாவட்ட ஆசிரியக்களுக்கான விவிலியவினாடி வினாப் போட்டியும் 1.00 மணிக்கு ஆறுகாணி, சூசைபுரம், தக்கலை பிலாங்காலை மறைவட்ட ஆசிரியர்களுக்கான போட்டியும் நடைபெறும்.

அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில்
இயக்குநர்

---

## மிஷன் லீக் இயக்கம்

**நம்பிக்கை நடைபயணம்:**

சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் சார்பில் ஜனவரி 25 அன்று மதியம் 2.30 மணியளவில் றாலி போட்டி நடத்தப் படுகிறது. நம்பிக்கை நடைபயணம் என்னும் சிந்தனையில் நடைபெறும் றாலி கல்லுவிளை மிஷன் லீக் அலுவலகத்திலிருந்து தொடங்கி பிலாங்காலை மறைவட்ட ஆலயம் வரை நடைபெறுகிறது. இந்நிகழ்வினை ஆயர் அவர்கள் தொடங்கி வைத்து நிறைவில் பரிசுகளையும் வழங்குகிறார். அனைத்து மிஷன் லீக் உறுப்பினர்களும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம். மறைவட்டங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப் பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

**மிஷன் லீக் கலைப் போட்டிகள்**

மிஷன் லீக் கலைப் போட்டிகள் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும். கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் மார்ச் 31க்குள் மிஷன் லீக் அலுவலகத்தில் கட்டுரை எழுதி சமர்ப்பிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பேச்சுப்போட்டிக்கான தலைப்பு:**

லூக் 16:15

**கட்டுரைப் போட்டிக்கான தலைப்பு:**

அழைத்தலும் பதிலும்

அருட்தந்தை ஜினோய் தோமஸ்,
இயக்குநர்



## குழந்தை ஈசோ இயக்கம்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரியவர்களே, இப்புது வருடம் உங்களுக்கு ஆசீர்வாதத்தினுடைய நாட்களாக அமையட்டும்.

**"கிறிஸ்டீன் 2015"**

"கிறிஸ்டீன் 2015" என்னும் பெயரில் டிசம்பர் 6,7 ஆகிய இரண்டு நாட்களும் நடைபெற்ற தியானத்தில் சுமார் 800 க்கும் மேற்பட்ட குழந்தைகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நடைபெற்ற நிகழ்ச்சிகள்

**தொடக்க விழா**

மறைமாவட்ட அளவில் பாலர் பிரிவு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையுள்ள குழந்தைகளுக்கான கிறிஸ்டீன் 2015 தியானமானது படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் 06-12-2014 அன்று காலை 9.30 மணிக்கு தூய ஆவி பாடலோடு ஆரம்பமானது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்க உரையாற்றி தியானத்தினை தொடங்கி வைத்தார்கள்.

**இரண்டாம் நாள்**

இரண்டாம் நாள் தியானம் 07-12-2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் தூய ஆவி பாடலுடன் ஆரம்பமானது. பின்பு அருட்தந்தை டோமினிக் (தியான குரு) அவர்கள் இறை வேண்டல் செய்து இயேசுவின் செல்லப் பிள்ளைகளாக வாழ நாம் தயாராக வேண்டும் என்றும், அவ்வாறு வாழ்வதற்கு சிறுபிள்ளைகளாகிய நாம் ஈசோவோடு செபித்தால் ஏராளமான ஆசீர்வாதங்களையும், இறை அனுபவங்களையும் பெற முடியும் என்றும், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்றும் செபத்தின் வாயிலாக உணர்த்தினார்கள்.

**கவுன்சிலிங் (ஆற்றுப்படுத்துதல்)**

குழந்தைகளின் நலன் கருதி, குழந்தைகளுக்கு நல்ல வழிகாட்டுதல்களும், பிரச்சினைகளுக்குப் பரிகாரம் செய்யவும்

இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேக்கடுமத்தில், அருட்சகோதரி நீமா அவர்கள் தலைமையில் கவுன்சிலிங் நடத்தப்பட்டது.

**வகுப்புகள்**

சிரிக்கவும், சிந்திக்கவும் உதவுகின்ற பல வகுப்புகள் நடைபெற்றது. 'இறை வார்த்தை நம் வாழ்வில்' என்ற தலைப்பில், அருட்தந்தை ஷோஜோ இருபத்தஞ்சில்சிற அவர்கள் காதுக்கும், உடலுக்கும் ஊக்கமூட்டும் வகையில் அழகான பாடல்களுடன் இறைவார்த்தையைப் பகிர்ந்து கொண்டதோடு, அதிலிருந்து பல வினாக்கள் கேட்டு பரிசுகள் வழங்கி உற்சாகமூட்டினார்கள்.

"குடும்பத்தில் பிள்ளைகளின்" பங்கு என்ற தலைப்பில் அருட்சகோதரர் பிரிண்டோ அவர்கள் வகுப்பு நடத்தினார்கள்.

இரண்டாம் நாள், முதல் அமர்வில் அருட்சகோதரி ஜெசி 'புனிதர்கள் வாழ்வு' என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். அமர்வின் இடையிடையே கருத்துப்படங்கள் வாயிலாக மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நீஜா 'அவர்கள் ஜெபத்தின் தேவை' என்ற கருத்தை மையமாகக் கொண்டு, சிறு பிள்ளைகளாகிய நமது செபம் மிக வல்லமை படைத்தது என்றும் காவல் தூதர்கள் எந்த ஆபத்தும் நம்மை அணுகாமல், தீய வாழ்விற்கு இட்டுச் செல்லாமல் பாதுகாக்கின்றார் என்றும் எடுத்துக் கூறியதோடு இடையிடையே கண்ணுக்கும், மனதுக்கும் விருந்தளிக்கும் விதத்தில் வினாக்களும் கேட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன.





***செய்கைப் பாடல்கள்***

அருட்சகோதரர்கள் மற்றும் அருட்சகோதரிகள் குழந்தைகளோடு இணைந்து செய்கைப் பாடல்கள் பயிற்றுவித்தார்கள்.

***ஒலி, ஒளி காட்சிகள்:***

குழந்தைகளின் அறிவை ஆக்கப்பூர்வமாக மாற்ற கண்ணுக்கும், காதுக்கும் விருந்தாக ஒலி, ஒளி நாடாக்களைப் போட்டு காண்பித்து குழந்தைகளை மகிழ்வித்தார்கள்.

தியானத்தை வழி நடத்திய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் அனைவருக்கும் நன்றி. குறிப்பாக 2-ம் நாள் தியானம் மிகச் சிறப்பாக நடத்திய CMC அருட் சகோதரிகளுக்கு நன்றி.

அனைவருக்கும் குழந்தை ஈசோ இயக்கத்தின் சார்பில் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**திருப்பலி**

தக்கலை மறைமாவட்டத்தின் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் முதல் நாள் திருப்பலி நிறைவேற்றியதோடு சிறப்பான மறையுரையும் வழங்கினார்.

இரண்டாம் நாள் பேரருட்தந்தை றோபின்ஸ் குழிக்கோட்டில் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் மற்றும் அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில் ஆகியோர்கள் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார்கள்.

***பாவ சங்கீர்த்தனம்***

குழந்தைகளின் உள்ளக் கறைகளைக் களைந்து இறைவனோடு ஒன்றித்து இறைவனின் திருவுடல் திரு இரத்தத்தைப் பெற்றுக்கொள்ள புதுநன்மை பெற்ற குழந்தைகளைப் பாவ சங்கீர்த்தனம் மூலம் ஆயத்தப்படுத்தப்பட்டது.

அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில்
துணை இயக்குநர்.

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

TCYM கிறிஸ்து பிறப்புக் கூடுகை2014

TCYM ன் கிறிஸ்து பிறப்புக் கூடுகை டிசம்பர் 21 ஞாயிறு மதியம் 2.30 மணிக்கு படந்தாலுமூடு மறைவட்ட ஆலய அரங்கில் நடைபெற்றது. சகோ. ஆரோக்கிய சூசை அவர்கள் தலைமையில் காண்பொலி வழியாக வாழ்த்துப் பாடல் பயிற்சி நடைபெற்றது. தொடர்ந்து இளையோர் இயக்கத் தலைவர் அபீஷ் வரவேற்புரை நல்க இயக்குநர் தந்தை அவர்கள் அறிமுக உரையாற்றினார். செயலர் செல்வி அபிஷா அறிக்கை சமர்ப்பித்தார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், இணைஇயக்குநர் அருட்தந்தை ஷாஜன், படந்தாலுமூடு வட்டார அமைப்பாளர் திரு.ஜெஸ்டஸ் ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். நித்திரவிளை வட்டார அமைப்பாளர் திரு.வின்ஸ்ராஜ் கேக் வெட்டி சிறப்பித்தார். தொடர்ந்து 2015ம் ஆண்டிற்கான செயல்பாடுகள், திட்டங்களை தலைவர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். தொடர்ந்து TCYM வழிகாட்டி என்ற வேலைவாய்ப்பு மையத்தை மஞ்சாலுமூடு வட்டார அமைப்பாளர் திரு ரமேஷ் அவர்கள் தொடங்கி வைத்தார். தொடர்ந்து இயக்குநர் தந்தை அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.



TCYM வழிகாட்டி

தக்கலை மறைமாவட்ட இளைஞர்களின் திறன்களை வெளிக்கொணரவும், வேலைவாய்ப்புகள் பற்றி தகவல்களை தெரிந்து கொண்டு அதற்கான பயிற்சிகளை மேற்கொள்ளவும் TCYM வழிகாட்டி என்ற வேலைவாய்ப்பு மற்றும் தகவல் மையம் தொடங்கப்பட்டு கல்லுவிளை இளைஞர் இயக்க அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது. இளைஞர்கள் தங்கள் சுய விபரத்தை பதிவு செய்து பயன்பெற கேட்டுக் கொள்கிறோம்.

**வழிகாட்டியின் பணிகளாவன:**

கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தகவல் பணி

பணியமர்த்துதல்

பயிற்சி மற்றும் கருத்தரங்குகள்

மதிப்புக் கல்வி பயிற்சிகள்

சுய வேலைவாய்ப்பு கருத்தரங்குகள்

கல்வித் தகவல் கண்காட்சிகள்

வேலைவாய்ப்பு முகாம்

**ஜனவரி மாத நிகழ்வுகள்:**

| | | | |
|---|---|---|---|
| 4 | ஞாயிறு | வழிகாட்டி வகுப்பு | - முக்கூட்டுக்கல் |
| 10 | சனி | இரவு விழிப்பு செபம் | - ஆறுகாணி |
| 11 | ஞாயிறு | வழிகாட்டி வகுப்பு | - ஆசீர் அரங்கம், கல்லுவிளை |
| 17 | சனி | இரவு விழிப்பு செபம் | - மஞ்சாலுமூடு |
| 24 | சனி | இரவு விழிப்பு செபம் | - படந்தாலுமூடு |

நிகழ்வுகளில் கலந்து கொண்டு பயன்பெற அன்புடன் அழைக்கிறோம்.

அருட்தந்தை பெலிக்ஸ்

இயக்குநர்

**Pope Francis**

**TWEETS**



**Pope Francis** @Pontifex Dec 30

Today people are suffering from poverty, but also from lack of love.



**Pope Francis** @Pontifex Dec 20

If Jesus is to become the centre of our life, we need to spend time in his presence, before the Tabernacle.

# புனித வின்சென்ட் தே பவுல் சபை

## மத்திய சபை கிறிஸ்மஸ் விழா

தக்கலை மத்திய சபையின் டிசம்பர் மாதக் கூடுகை மற்றும் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் 21.12.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு படந்தாலுமூடு மறை வட்ட ஆலயத்தில் நடைபெற்றது.



அரைமணி நேர செப வழிபாட்டுற்குப் பின் ஆரம்பமான இந்நிகழ்வில் தலைமைப் பணியாளர் சகோ. ஐயாத்துரை அவர்கள் அனைவரையும் வரவேற்றார். ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் கேக் வெட்டி கிறிஸ்மஸ் செய்தி வழங்கினார்கள். இந்நிகழ்வில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

## வட்டாரசபை கிறிஸ்மஸ் விழா

ஆறுகாணி வட்டார சபை கிறிஸ்மஸ் கொண்டாட்டம் 21.12.2014 ஞாயிறு திருப்பலிக்குப்பின் 9.00 மணியளவில் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. வட்டார சபை தலைவர் சகோ.செபாஸ்டின் அவர்கள் அனைவரையும் வரவேற்க, ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஜோஸ் ஒட்டலாங்கல் அவர்கள் கிறிஸ்மஸ் கேக் வெட்டி ஆன்மீக உரையாற்றினார். மத்தியசபை சார்பில் சகோ.வில்சன் அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரையாற்றினார். மத்தியசபை பொருளர் சகோ. எபி தோமஸ், காருண்யாநிதி மேலாளர் சகோ.ஜோஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். வட்டாரசபை துணைத்தலைவர் சகோ.சுடர் மேலதில் அவர்கள் நன்றி நவில கிறிஸ்மஸ் விழா இனிதே நிறைவடைந்தது.



களியல் வட்டார சபையின் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம்14.12.2014 மதியம் 2.30 மணிக்கு நடைபெற்றது. வட்டாரசபை பொருளர் சகோ. ரமேஷ் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமாக, கோட்டாறு மறைமாவட்ட மாஞ்சகோணம் பங்குத்தந்தை லாறன்ஸ் அவர்கள் தியான உரையாற்றினார். அருட்தந்தை ஜினு கோட்டக்கப்பறம்பில், மத்திய சபைத் துணைத்தலைவர் சகோ.மணிவண்ணன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினார்கள். இந்நிகழ்வில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன. வின்செந்தியர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகளுமாக நடைபெற்ற இந்நிகழ்வின் இறுதியில் கிறிஸ்மஸ் கேக் வெட்டி வாழ்த்துகளும் தெரிவிக்கப் பட்டது. 55 வின்செந்தியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நித்திரவிளை வட்டார சபையில் 14.12.2014 அன்று மதியம் 2.30 மணிக்கு கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது. தொடக்க செபத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் வட்டார சபைத் தலைவர் சகோ. வின்செண்ட் ராஜ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். செயலர் சகோ.ஸ்னேக லதா அறிக்கை சமர்ப்பித்தார். மத்திய சபைத் தலைவர் சகோ.ஐயாத்துரை, செயலர் சகோ.எட்வின்சன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் கிறிஸ்மஸ் கேக் வெட்டி வாழ்த்தி, தலைமை உரையாற்றினார்கள். நிறைவில் வயலங்கரை மகளிர் கிளைச்சபைச் செயலர் சகோ. மேரி அவர்கள் நன்றி கூறினார்கள்.

பிலாங்காலை வட்டார சபையின் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் 14.12.14 பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றது. வட்டாரசபைத் தலைவர் சகோ.ஜேம்ஸ் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் மத்திய சபை காருண்யா நிதி மேலாளர் சகோ. ஜோஸ், திட்ட அலுவலர் சகோ.தேவராஜ் ஆகியோர் கலந்து கொண்டு கிறிஸ்மஸ் செய்தி வழங்கினர். இறுதியில் மத்திய சபை மகளிர் பிரதிநிதி சகோ.அமலாமேரி அவர்கள் நன்றிகூற இறுதி செபத்துடன் விழா இனிதே நிறைவடைந்தது.

சூசைபுரம் வட்டார சபையின் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் சூசைபுரம் உதவி பங்குத்தந்தை லின்ஸ்லால் அவர்கள் தலைமையில்

நடைபெற்றது. வட்டார சபைத் தலைவர் சகோ.லாறன்ஸ் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மத்திய சபை வெளிநாட்டு கடிதத் தொடர்பாளர் சகோ.றாபி வாழ்த்துரையாற்றினார். அருட்தந்தை வின்ஸ்லால் அவர்கள் கேக் வெட்டி கிறிஸ்மஸ் செய்தி வழங்கினார்கள். நிறைவில் வட்டாரசபை பொருளர் சகோ.பிரபு நன்றி கூற இறுதி செபத்துடன் விழா இனிதே நிறைவடைந்தது.

சகோ. சுரேஷ் குமார்,
செய்தித்தொடர்பாளர்.

---

## வெள்ளாம்பி திருத்தொண்டுத்தள திருவிழா...........

வெள்ளாம்பி தூய மிக்கேல் அதிதூதர் திருத்தொண்டுதள திருவிழா டிசம்பர் 18 வெள்ளி மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது. முதலில் திருத்தொண்டுத் தள மக்கள் சார்பில் ஆயருக்கு வரவேற்பும், பின் ஆயர் தலைமையில் திருப்பலியும்



நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்குத் தந்தை றோபின் கூறு முள்ளில் அவர்கள் அனைவரையும் வரவேற்க, மறைமாவட்டச் செயலர் அருட்தந்தை ஆன்றணி, திருத்தொண்டுக்குழு செயலர் திரு. எட்வின்சன், திரு. பெர்லின் ஆகியோர் வாழ்த்துரையும் ஆற்றினர். ஆயர் அவர்கள் கிறிஸ்மஸ் கேக் வெட்டி தலைமையுரையாற்றி பரிசுகள் வழங்கினார். நிகழ்வின் இறுதியில் திருத்தொண்டுத்தளத் தலைவரும், சேவைச்செம்மல் விருது பெற்றவருமான திரு.மரியதாஸ் அவர்கள் நன்றியுரையாற்றினார். மாணவ மாணவியரின் கண்கவர் கலைநிகழ்வுகளும் நடைபெற்றது. இந்நிகழ்வில் முஞ்சிறை SDS அருட்சகோதரிகள் மற்றும் நாகர்கோவில் FCC அருட்சகோதரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



## அருட்தந்தையர்களின் கிறிஸ்மஸ் விழாக் கூடுகை....

டிசம்பர் 18 அன்று அருட்தந்தையர்கள் அனைவரும் ஆயருடன் இணைந்து கிறிஸ்மஸ் விழாவை சங்கமத்தில் கொண்டாடி மகிழ்ந்தனர். அரைமணி நேர இறைவேண்டலுக்குப் பின் அருட்தந்தையர்கள் தங்கள் திருத்தொண்டு அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். ஆயர் அவர்கள் குழந்தை ஈசோவின்



வரவேற்புப் பற்றிய ஆப்பிரிக்கா பாடலை பயிற்றுவித்தார்கள். அருட்தந்தை பெலிக்ஸ் மற்றும் குழுவினர் விளையாட்டுகள் வழி நிகழ்வினை மேலும் மெருகூட்டினர். நிகழ்வின் உச்சகட்டமாக அனைவராலும் நிஜக் குடில் நிகழ்வு நடத்தப்பட்டது. தொடர்ந்து ஆயர் அவர்கள் கிறிஸ்மஸ் பரிசுகளை அனைத்து அருட்தந்தையர்களுக்கும் வழங்கினார். ஆடம்பர அறுசுவை உணவுடன் விழா இனிதே நிறைவடைந்தது. அருட்தந்தையர்கள் ஷோஜோ, செபி ஆகியோர்கள் ஒருங்கிணைத்தனர். குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் விழா ஏற்பாடுகளையும், திருத்தொண்டர்கள் மற்றும் அருட்சகோ. அபிலாஷ் கிறிஸ்மஸ் குடில், அலங்கார அமைப்புகளையும் செய்திருந்தனர். இந்நிகழ்வில் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அனைத்து அருட்தந்தையர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அருட்சகோதரர்களிடமிருந்து....

அனைத்து குருமடங்களிலிருந்தும் அருட்சகோதரர்கள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களுக்கு பிறகு டிசம்பர் 20 அன்று மறைமாவட்டத்தை வந்தடைந்தார்கள். அனைவரும் அவரவர் பங்குகளில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடுவதற்கு ஆயர் அவர்கள் அனுமதி வழங்கினார். அருட்சகோதரர்கள் அனில்ராஜ், அஜின்ஜோஸ், சாமுவேல் ஆகியோர் சாலக்குடி டிவைனில் நடைபெற்ற இளைஞர் சிறப்பு தியானத்தில் கலந்து கொண்டார்கள்.

### அருட்சகோதரர்களின் கூடுகை

அருட்சகோதரர்களின் கூடுகை ஆயர் தலைமையில் டிசம்பர் 26 அன்று மாலை சங்கமத்தில் நடைபெற்றது. அருட்சகோதரர்கள் அனில் ராஜ், சாமுவேல், ஜெபனேஷ் சிங், ரிட்டோ ஆகியோர் முறையே வடவாதூர், மங்கலப்புழா, திருச்சூர், சத்னா குருத்துவக் கல்லூரிகளைப் பற்றியும், சிறப்புப் பணிகளைப் பற்றியும் அனைவரிடமும் பகிர்ந்து கொண்டனர். களப்பணியாற்றும் அருட்சகோதரர்கள் ஜெஸ்டின் சுதீஷ், அபிலாஷ், ஜெஸ்டின் ஸ்டெல்லஸ் அவரவர்களின் பணித்தளங்களைப் பற்றி எடுத்துரைத்தனர். ஆயர் அவர்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்ததோடு பரிசுகளையும் வழங்கினார்.



விடுமுறை நாட்களில் நடைபெற்ற விவிலிய கலைப் போட்டிகளில் அருட்சகோதரர்கள் அனைத்து மறைவட்டங்களுக்கும் சென்று கலைபோட்டிகளை மதிப்பீடு செய்தனர்.



ஜனவரி 5 அன்று அனைத்து அருட்சகோதரர்களும் அவரவர் குருமடங்களுக்கு தங்களின் அடுத்த பருவப் பயிற்சிக்காக செல்வார்கள். அனைவரையும் உங்கள் செபங்களில் நினைவு கூர கேட்டுக்கொள்கிறேன்.

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை அனைவரும் சிறப்புடன் கொண்டாட வாழ்த்துகிறேன். அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்...

அருட்சகோ. அனில்ராஜ்

அருட்சகோதரர்கள் தலைவர்

---

### பெத்சாய்தா அர்ச்சிப்பு....

குமாரகோவில் அருகே அருட்தந்தை மாத்யூ குழிஞாலில் அவர்கள் வசிக்கும் பகுதியில் ஆன்மீகத்தை வளர்த்தும் விதமாக பெத்சாய்தா என்னும் பெயரில் மையம் அமைக்கப்பட்டு டிசம்பர் 19 அன்று ஆயர் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. இந்த பெத்சாய்தா மையம் செபம் மற்றும் ஆறுதல் போன்றவற்றை தரும் வகையில் அமைதியான சூழலில் அமைக்கப்பட்டுள்ளது.

### SABS அருட்சகோதரிகளின் ஆலயம் அர்ச்சிப்பு

சூசைபுரம் SABS அருட்சகோதரிகளின் வட்டார இல்லத்தின் புதிய ஆலயம் ஆயர் அவர்களால் டிசம்பர் 20 அன்று அர்ச்சிக்கப்பட்டது. இந்நிகழ்வில் SABS துறவற சபையின் சங்ஙனாச்சேரி மாகாணத் தலைவி அவர்களும் கலந்து கொண்டார். வட்டாரத் தலைவி அருட்சகோ. றோஸ் கானாசேரி அவர்கள் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தார்கள். இவ்வாலயம் சீரோ மலபார் சபையின் பாரம்பரியத்துடன் புதிய வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



# DIOCESE OF THUCKALAY

## 2014

## Mission Sunday - Collections

| Sl.No | Place | Church Name | Amount |
|---|---|---|---|
| | | | |
| 1 | Anjugramam | St. Thomas | 7500 |
| 2 | Anamughom | Loretto Matha | 1300 |
| 3 | Anayadi | St. George | 600 |
| 4 | Annikkarai | St. Mathew's | 4313 |
| 5 | Arukani | Holy Family | 6,245.00 |
| 6 | Athencode | St. Maria Goretti | 1,255.00 |
| 7 | Bengri | St. Benadict's | |
| 8 | Cheenivilai | Amala Maria | 1,000.00 |
| 9 | Chenamcode | Lourdu Matha Mission | |
| 10 | Chiristurajapuram | Christ the King | 3,500.00 |
| 11 | Kaisalavilai | St. Xavier's | 3,500.00 |
| 12 | Kaliyal | St. Mary's | |
| 13 | Karode | St. Joseph's | 2467 |
| 14 | Kattathurai | St. Michael's | |
| 15 | Kalluvilai | Bld. Mother Theresa | 1750 |
| 16 | Kazhuvanthittai | St. Martin de Porres | 1500 |
| 17 | Killiyoor | Deva Matha | 4650 |
| 18 | Kulasekaram | St. Joseph's | |
| 19 | Malaicode | Holy Cross | 16469 |
| 20 | Manjalumoodu | Little Flower | 62670 |
| 21 | Mankarai | St. James | 5200 |
| 22 | Marappady | St. Thomas | 7000 |
| 23 | Marthandam | St. Vincent de Paul | |
| 24 | Mathapuram | St. Thomas | 700 |
| 25 | Mezhacode | St. Francies Assisi | 8001 |
| 26 | Muzhucode | St. Thomas | 5000 |
| 27 | Mukkoottukal | Holy Family | 15000 |
| 28 | Munchirai | St. George | |
| 29 | Nagercoil | St. Alphonsa | 51000 |
| 30 | Netta | St. Thomas | 5500 |
| 31 | Nithravilai | Jeyamatha | 8100 |
| 32 | Padanthalumoodu | Sacred Heart | 20000 |
| 33 | Palappallam | Christ the King | 4000 |
| 34 | Pallikonam | Sacred Heart | 1500 |
| 35 | Palugal | St. Thomas | 16500 |
| 36 | Paraicode | Christ the King | |
| 37 | Pathukani | St. Thomas | 2042 |
| 38 | Penu | St. Mary's | |
| 39 | Perunchilampu | St. Thomas Mission | |
| 40 | Pilankalai | Little Flower | 5000 |
| 41 | Pilankarai | Loretto Matha | 4510 |
| 42 | Pudur | St.Thomas | 1400 |
| 43 | Soosaipuram | St. Joseph's | 6870 |
| 44 | Thackalivilai | Holy Family | 1670 |
| 45 | Thadickarankonam | St. Joseph's | 5060 |
| 46 | Thettiyode | St. Paul's | 1760 |
| 47 | Thettivilai | St. Michael's | 7500 |
| 48 | Thuckalay | St. Mary's | 1100 |
| 49 | Varuthattu | St. Xavier's | 1400 |
| 50 | Vayalinkarai | St. Antony's | 2950 |
| 51 | Valan Nagar | St. Joseph's | 1800 |
| | | | |
| | Carmel Jothi School | Pilankarai | 11500 |
| | | | |
| | | Total | 313282 |

31.12.2014

Fr. Mathew Mulangasseril
**Finance Officer**

### குடும்ப ஆண்டு நிறைவு விழா

குடும்ப ஆண்டு நிறைவு விழா மறைமாவட்ட அளவில் ஜனவரி 18 அன்று மதியம் 1.30 மணியளவில் கல்லுவிளை ஆசீர் அரங்கில் நடைபெறுகிறது. அனைத்து பங்குகளிலிருந்தும், இயக்கங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க அன்பாய் அழைக்கிறோம்.

### மறைமாவட்டத்திற்கான புதிய இணையதளம்

மறைமாவட்டத்திற்காக புதிய இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது. செய்திகளை இணையதளத்திலும் முகநூலிலும் தெரிந்து கொள்ளலாம்.

இணையதள முகவரி **www.thuckalaydiocese.org**

முகநூல் முகவரி **www.facebook/thuckalaydiocese**

## BIRTHDAY & FEASTDAY OF REV. FATHERS

### FEASTDAY

| | | |
|---|---|---|
| FR. SIJU PUTHENPURAYIL | : | JANUARY 01 |
| FR. SANIL PANTHICHIRACKAL | : | JANUARY 03 |
| FR. JOHNSILAL ARACKAPARAMPIL | : | JANUARY 03 |
| FR. SEBY MANIMALAKANDATHIL | : | JANUARY 20 |
| FR. ROBIN KOORUMULLIL | : | JANUARY 20 |
| FR. JUSTIN CHERUVELIL | : | JANUARY 20 |
| FR. MIJO PUTHENPURAYIL | : | JANUARY 20 |
| FR. DEVIS KARUKAPALLI CMI | : | JANUARY 20 |
| FR. SAM PUTHUPARAMBIL CMI | : | JANUARY 20 |

### BIRTHDAY

| | | |
|---|---|---|
| FR. CHACKO BASIL CMI | : | JANUARY 07 |
| FR. SIJU PUTHENPURAYIL | : | JANUARY 13 |
| FR. SAJI ELAMBA SERIL SDB | : | JANUARY 17 |
| FR. LUKA KOLLAMPARAMPILCMI | : | JANUARY 17 |
| FR. TOJI PARAMPILPARAMPIL | : | JANUARY 18 |
| FR. KURIAN PANTHICHIRACKAL | : | JANUARY 20 |
| FR. TOM KUNNUMPURAM | : | JANUARY 24 |
| FR. ANTONY CHUNDELIKKATT | : | JANUARY 24 |
| FR. LIJO THEKKEL | : | JANUARY 24 |
| FR. GEO CHOOZHIKUNNEL | : | JANUARY 26 |
| FR. JOMON MANGALAMADAM | : | JANUARY 26 |



## முதலாண்டு நினைவில் அருட்தந்தை தோமஸ் தெக்கேயில்....

2013 டிசம்பர் 14 அன்று இறையடி சேர்ந்த அருட்தந்தை தோமஸ் தெக்கேயில் அவர்களின் முதலாண்டு நினைவு நாள் மறைமாவட்ட அளவில் டிசம்பர் 12 அன்று கல்லுவிளை



கன்னியாகுமரி சமூக சேவை சங்க அலுவலகத்தில்ஆயர் அவர்களின் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. கூரியா உறுப்பினர்கள், அருட்தந்தையர்கள் மற்றும் அருட்தந்தை தோமஸ் தெக்கேயில் அவர்களின் குடும்பத்தினர்களும் கலந்துகொண்டனர். திருப்பலிக்கு பின் இரங்கல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. KKSSS முன்னாள் அலுவலர் திரு.சுகுமாரன் அவர்கள் தந்தை அவர்கள் KKSSS சங்க வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புகளைப் பற்றியும், ஆயர் அவர்கள் தன்னோடு மறைமாவட்ட நிதிக் காப்பாளராக பணியாற்றிய அனுபவத்தைப் பற்றியும் எடுத்துரைத்தனர்.

டிசம்பர் 16 அன்று அருட்தந்தை அவர்களின் பிறந்த ஊரான மாங்குளம் பங்கில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் ஒரு சில அருட்தந்தையர்கள் கலந்து கொண்டு திருப்பலி நிறைவேற்றி தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்தனர். தக்கலை மறைமாவட்டத்தில் அருட்தந்தை அவர்கள் ஆற்றிய அரும்பணியையும் நினைவு கூர்ந்தனர்.

## விழுது- 4

## புனித அந்தோணியார் ஆலயம், வயலின்கரை



அமைவிடம்:

தேசிய நெடுஞ்சாலை 47-ல் களியக்காவிளையிலிருந்து தெற்காக 3 கி.மீ. தூத்தூர் சாலையில் வர - திட்டங்கனாவிளை - அதிலிருந்து 1 கி.மீ. தொலைவில் மெதுகும்மல் சாலையில் அமைவது புனித அந்தோணியார் ஆலயம், வயலின்கரை.

<u>நடைபெறும் ஆன்மீக நிகழ்வுகள்:</u>

1. ஞாயிறு

காலை 8.15 - காலைத்தொழுகை

8.30 - திருப்பலி

10.30 - மறைக்கல்வி, சிறுபுஷ்ப மிஷன் லீக், மற்றும் குழந்தை ஈசோ இயக்கம்

2. செவ்வாய்

மாலை 5.30 - அந்தோணியார் செபமாலை

5.45 - திருப்பலி

6.45 - அந்தோணியார் நவநாள்

3.புதன், வியாழன்

காலை 6.30 - திருப்பலி

4. வெள்ளி

மாலை 5.45 - நற்கருணை ஆராதனை

5. சனி

காலை 7.00 - திருப்பலி

7.45 - குழந்தை ஈசோ இயக்கம்



ஆலய வரலாறு:

1962-ம் ஆண்டு எம்மதத்தையும் சாராது பாமரர்களாக




பல தெய்வங்களை வழிபட்டு, வேப்பிலை மந்திரம் மந்திரிக்கப்பட்டு, காற்று, பேய் இவற்றால் உள்ளங்கள் நிரப்பப்பட்டு, மூட நம்பிக்கையிலும் பழக்க வழக்கங்களிலும் மூழ்கிய மக்கள் - மணவிளாகம், தச்சக்கோடு, வடூர்விளை, மேவிளாகம், மேக்கவிளை, சீனிவிளை, முழங்குவிளாகம், வாழவிளாகம் என்னும் சிற்றூர்களில் வாழ்ந்து கொண்டிருந்தனர். இவர்களிடையே உருவாகிய மனம் மாற்றமே புனித அந்தோணியார் ஆலயம், வயலின்கரை.


**பணியாற்றிய அருட்தந்தையர்களும் பணிச்சிறப்புகளும்:**

1.அருட்தந்தை சகறியாஸ் காயித்தறா: (1962 - 1969)

1955-ல் பாப்பானவரின் "முல்தேரும் பிதேலியும்" என்னும் ஆணை வழி சங்஖னாச்சேரி மறைமாநில எல்கை விரிவுபடுத்தப்பட்டதின் பயனாக சீரோ மலபார் திருச்சபை குமரி மாவட்டத்தில் 1960-ல் காலூன்றியது. 1962-ல் செறுவாரக்கோணத்தை சார்ந்த தபால்காரரும் நில அளவையரும் ஆகிய திரு. எலியாஸ் என்பவரின் துணையுடன் முன்னாள் இராணுவத்தினராகிய மேக்கவிளை திரு. குமாரன் என்பவரை தொடர்பு கொண்டு அவர் மூலம் வயலின் கரையில் பந்தனான் விளை என்னுமிடத்தில் திரு. மனுவேல் நாடாரின் நிலத்தை குத்தகைக்கு எடுத்து ஓலையால் சுவர், கூரை அமைத்து மணவிளாகம், தச்சக்கோடு, வடூர்விளை, மேவிளாகம், மேக்கவிளை, சீனிவிளை,

முழங்குவிளாகம், வாழவிளாகம் போன்ற இடங்களில் வாழ்ந்த மக்களை திரட்டி மறைக்கல்வி புகட்டி 1962 ஆகஸ்ட் 5-ம் தேதி 73 நபர்களுக்கு திருமுழுக்கு கொடுத்து, புனித அந்தோணியார் ஆலயம் வயலின்கரை என்ற புது சீரோ மலபார் திருச்சபை சமூகத்தை உருவாக்கினார்.

வீடுகள் சந்திப்பு, செபமாலை, பேய்கள் ஓட்டுதல் என்ற பக்தி முயற்சிகள் மூலமும் - ஏழைகளுக்கு கத்தோலிக்கா நிவாரண சங்க உதவியுடன் உணவு, உடைகள் வழங்கியும் கிறிஸ்துவின் அன்பு பணியைத் தொடர்ந்தார். குழந்தைகளை பள்ளிக் கூடம் அனுப்பவும், நோயாளிகளை மருத்துவமனை கொண்டு செல்லவும், பேய்களை தானே ஓட்டவும் செய்து கிறிஸ்துவின் ஒளியை மக்கள் இதயங்களிலும் இல்லங்களிலும் ஏற்றி சுமார் 9 ஆண்டுகள் பங்குத்தந்தையாக பணியாற்றினார். 260 பேருக்கு திருமுழுக்கு கொடுத்துள்ளார். திரு மனுவேல் நாடாரிடமிருந்து 45 சென்ட் நிலம் வாங்கி சேர்த்தார்.


பழைய ஆலயத் தோற்றம்

செபமாலை பக்தி வளர்த்தினார். வின்சென்ட் தே பவுல் சங்கத்தை தொடங்கி நடத்தினார். மறைக்கல்வியின் தலைமை ஆசிரியராக இருந்து இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் சின்னக் குறிப்பிட புத்தகத்தை புகட்டினார். ஆண் குழந்தைகளுக்கு திரு. சுகுமாரன் அவர்களும் பெண் குழந்தைகளுக்கு திரு. செல்லசுவாமி அவர்களும் மறைக்கல்வி புகட்டி வந்தனர். சில வருடங்களுக்குபிறகு POC யின் மலையாள புத்தகங்கள் வருவித்து மறைக்கல்வி புகட்டப்பட்டது. மஞ்சாலுமூட்டிலிருந்து அருட்சகோதரி இசபெல்லா அவர்கள் தலைமையில் திரு இருதய சபை



கன்னியர்களை வரவழைத்து மறைக்கல்வி புகட்டவும் வீடுகள் சந்திக்கவும் வழிவகை செய்தார். அவர் காலத்தில் சுமார் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பங்கில் சேர்ந்திருந்தனர்.

**2. அருட்தந்தை தோமஸ் முட்டத்துக்குந்நேல்:**

காயித்தற அடிகளாரின் உதவிப் பங்குத் தந்தையாக சுமார் 3 ஆண்டுகள் வயலின்கரையில் மாறி மாறி வந்து பணியாற்றினார்.

**3. அருட்தந்தை செபாஸ்டின் மஞ்சேரிக்களம் (1969-81)**

சமூக சேவை திட்டங்களால் அன்பு பணி செய்து நற்செய்தி அறிவித்து இறைமக்கள் சமூகத்தை திடமான விசுவாசத்தில் நிலை நிறுத்தியவர். ''மக்கள் நல்வாழ்வு இயக்கம்'' என்ற சமூக சேவை அமைப்பை உருவாக்கி - கடன் நிவாரணத் திட்டம், சிறுசேமிப்பு திட்டம், பசுமாடு வளர்ப்புத் திட்டம், வாழை விவசாயத் திட்டம் போன்ற திட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமும் ஏழைகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவினார். கல்வி கற்றிட அனைத்து மாணவ மாணவிரையும் தூண்டி, பொருளாதார உதவிகள் செய்து கொடுத்தார். கல்லூரி படிப்புகளுக்கும், ஆசிரியர் பயிற்சிக்கும் இளைஞர்களை அனுப்பினார்.

ஓலை குடிசைகளாக இருந்த அனைத்து வீடுகளையும் ஓட்டு வீடுகளாக மாற்றினார். நிலமற்ற ஏழைகளுக்கு வீடுகளை இலவசமாக கட்டிக் கொடுத்தார். தாய்மை சேய்மை திட்டம் வழி கர்ப்பிணி மகளிர்க்கும், சிறார்க்கும் சுத்தம் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தி, மருந்து மற்றும் சத்துணவு கிடைக்க வழி செய்தார். நிலமுடையோர்க்கு ''வேலைக்கு உணவுத் திட்டம்'' வழியாக நிலவளம் பாதுகாக்க உதவி செய்தார்.

1971-ம் ஆண்டு மண்சுவர் ஓலை கூரையாக இருந்த ஆலயத்தை மாற்றி சுமார் 350 பேர் அமர்ந்து ஆராதனை செய்யும் அளவில் அழகிய ஆலயத்தை கட்டினார். சங்ஙனாச்சேரி மறை மாநில பேராயர் மார் ஆன்றணி படியற அவர்களால் ஆலயம் அர்ப்பணம் செய்யப்பட்டது. கூடவே 6 சென்ட் நிலம் திரு. ஜெபப்பிள்ளை என்பவரிடம் வாங்கி மறைக்கல்வி நடத்தவும் சமூக சேவை செயல்கள் செயல்படுத்தவும் சமூகக்கூடம் நிறுவினார்.

திட்டங்கணாவிளை என்னுமிடத்தில் ASMI சகோதரிகளுக்கான 'கன்னியர் இல்லமும்' 'நம்பிக்கை இல்லமும்' அமைத்தார். சுமார் 150 நபர்களுக்கு திருமுழுக்கு வழங்கியுள்ளார். மறைக்கல்விக்கு திண்டிவனம் தமிழ்பாட நூல்களை வருவித்து மறைக்கல்வியை செம்மைப்படுத்தி மறைக்கல்விக்கு திரு.இராஜமணி அவர்களை தலைமையாசிரியராக்கி 12-ம் வகுப்பு வரையுள்ள மறைக்கல்வி நிலையமாக மாற்றினார். திரு பால் பத்மநாபன், மேத்யூ கோவிந்தன் போன்றவர்களை திண்டிவனத்திற்கு மூன்றாண்டு கால பயிற்சிக்காக அனுப்பினார்.

அன்னிக்கரையில் பாலர்பள்ளி நிறுவி அங்கு ஒரு சிற்றாலயம் அமைத்து பள்ளிக்கூடமும் அமைத்தார். இவர் வயலின்கரையில் பணியாற்றிய காலம் "வயலின்கரை பங்கின் பொற்காலம்" எனலாம்.

**4. அருட்தந்தை மாத்யூ வடக்கே முறியில் (1971-74)**

அருட்தந்தை செபாஸ்டின் மஞ்சேரிக்களம் அவர்கள் கனடா நாட்டிற்கு உயர் படிப்புக்காக அனுப்பப் பட்டபோது பங்குத்தந்தையாக அருட்தந்தை மாத்யூ வடக்கே முறியில் அவர்கள் பொறுப்பேற்றார். சிலகாலம் நெசவுத் தொழில் நடத்திட வசதிகள் செய்தார். மறைக்கல்வி மாணவர்களை சுற்றுலா பயணம் கொண்டு சென்றார். சுமார் 55 பேருக்கு திருமுழுக்கு கொடுத்தார்.

**5. அருட்தந்தை ஜாண் தெக்கேல்**

அருட்தந்தை வடக்கே முறியில் அவர்களுடன் உதவிப் பங்குத் தந்தையாக இருந்து பணியாற்றினார். இரவு நேர கிறிஸ்மஸ் பாடலுக்கு ஆக்கவும் ஊக்கவும் அளித்தார்.

**6. அருட்தந்தை அகஸ்டின் கொல்லப்பறம்பில்(1981)**

சுமார் 6 மாதங்கள் பங்குத் தந்தையாக இருந்தார்.

**7. அருட்தந்தை ஆபிரகாம் கொங்கம்புழ S.J (1981)**

4 மாதங்கள் பணியாற்றினார்.

**8. அருட்தந்தை ஜோசப் மடத்தில் (1981-1982)**

அதிக மக்களை பங்கில் சேர்த்து திருமுழுக்கு வழங்கினார். கிறிஸ்மஸ் சீட்டு குலுக்கல் முறையை மறைக்கல்வி மாணவர்களுக்கு அறிமுகம் செய்தார். மாதிர் ஜோதிஸ் இயக்கம் செழிக்கச் செய்தார். சிறுபுஷ்ப மிஷன் லீக் உருவாக்கினார்.

**9. அருட்தந்தை ஜோர்ஜ் களம் (1982-84)**

மறைக்கல்விக்கு ஊக்கம் அளித்தார். மாதிர் ஜோதிஸ் மற்றும் மரியாயின் சேனையை பலப்படுத்தினார். பீட திருப்பணியாளர் அமைப்பு உருவாக்கினார். யுவ தீப்தி சிறப்பான முறையில் அமைத்தார்.

**10. அருட்தந்தை லூயிஸ் வெள்ளானிக்கல் (1984-86)**

பிதிர்வேதி அமைப்பை உருவாக்கினார். குமரி மாவட்டத்திலேயே வயலின்கரை ஆலய பிதிர்வேதி சிறப்பு மிக்க நிலையில் செயல்பட்டது. இறைமக்களுக்கு செப ஆர்வம் உருவாக்க பங்கில் செபக்குழு அமைத்தார்.

**11.அருட்தந்தை ஆன்றணி போருர்கரை (1986-88)**

இருமுறை பங்குத்தந்தையாக பணியாற்றினார். மறைக்கல்வி, வின்சென்ட் தே பால் சங்கம் மற்றும் பக்த இயக்கங்கள் வளர ஊக்கமூட்டினார். உயர்கல்வி கற்கின்ற இளைஞர்களுக்கு கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்திலிருந்து கடன் வசதிகள் செய்து கொடுத்தார். ஆலயத்தில் முதன் முதலாக ஒலிப்பெருக்கி வசதி செய்து தந்தார்.

**12. அருட்தந்தை சூரியன் புத்தன்கரை (1989)**

**13. அருட்தந்தை ஜோசப் பறப்பள்ளி (1989)**

**14. அருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் (1989-1992)**

ஆலய வளாகம் தூய்மையாக வைத்திருக்கவும் இளைஞர்கள் கலைத் துறையில் வளர்ச்சியடையவும் துணை நின்றார். நாடகம் நடனத்திற்கு தேவையான துணிமணிகள் ஒப்பனை பொருட்கள் பங்கிலேயே உருவாக்க காரணமானார். இராசா திருப்பலி முதன் முதலில் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்த பெருமை இவரைச் சாரும்.

**15. அருட்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் (1992 - 1992)**

இருமுறை பங்குத்தந்தையாக பணியாற்றினார். பழுதடைந்திருந்த பீடத்தின் முன்பாகம் நீக்கி விட்டு வளைவு அரங்கு

அமைத்தார். கூரை ஓடு இறக்கி புதுக்கினார். மணிக்கூண்டு அமைத்தார். செபவாஞ்சை மக்களிடையே உருவாக்கினார்.

16. அருட்தந்தை மாத்யூ ஓடலானி (1995)

17. அருட்தந்தை டோமினிக் பாலத்திங்கல் (1996)

18. அருட்தந்தை சூரியன் நெடுவேலிச் சாலுங்கல் (1996)

19. அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் (1996-97)

இளங்குருவானவராக வந்து சீரிய ஆன்மீக பணிகளால் மக்களின் மனம் கவர்ந்தவர். வயலின்ரை பங்கில் மறுமலர்ச்சியை உருவாக்கியவர். சபையிலிருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் தாய் சபைக்கு கொண்டு வந்தவர். திருமணங்களை ஒப்புரவு படுத்தியவர். பங்கிலுள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் திருமுழுக்கு பாவசங்கீர்த்தனம் கொடுத்து ஆயரை அழைத்து விசுவாசத்தில் உறுதிபடுத்தியவர். பங்கிலுள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் ஞாயிறு ஆராதனையில் பங்கெடுக்கச் செய்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையையும் ஆலய ஆண்டு விழா போல் விளங்கச் செய்தவர்.

20. அருட்தந்தை சக்கரியாஸ் செறுநிலம் MST 1996 - 97

எமது ஆலயத்தின் பாதுகாவரலான புனித அந்தோணியாரைப் போன்று வாழ்ந்தவர். இவர் காலத்தில் வயலின்கரை ஆலயம் தனிப்பங்காக மாறியது. குருக்களுக்கு தங்க வீடும், நிகழ்வுகள் நடத்த சமூகக் கூடம் புதிதாக அமைத்தவர். 'காரித்தாஸ் இந்தியா'வின் நிதியுதவியுடன் ஆலய வளாகத்தில் கிணறு அமைத்து சுற்று வட்டார மக்களின் தண்ணீர் தாகத்தை தணித்தவர். இளைஞர்களுடன் சேர்ந்து கலைவளர்ச்சியில் ஈடுபட்டவர். அதிகம் பேசாது செயல்பட்டவர். எல்லா நேரமும் ஆலய நற்கருணை பேழை முன் செபித்துக் கொண்டே இருந்தவர்.

கன்னியாகுமரி சமூகசேவை சங்கம் அலகு - ஐ அமைத்து சமூக சேவையில் ஈடுபட்டவர். மக்களை ஒன்று திரட்டி தத்தம் பொருளாதார தேவைகளை தாமே நிவர்த்தி செய்திட வழி காட்டியவர். சிறு சேமிப்பை ஊக்குவித்து குறைந்த வட்டிக்கு கடன் வழங்கி சிறு தொழில்கள், விவசாயம், வியாபாரம் போன்றவற்றை ஊக்குவித்து சுயசார்பு அடைய பாடுபட்டார். 1999-ல் பங்கு பொதுமன்றமும்,



பங்கு பேரவையும் தொடங்கியவர். பங்கின் அனைத்து நிகழ்வுகளையும் பங்கு பேரவையின் கீழ் கொண்டு வந்தவர். ''அந்தோணியார் செபமும் நவநாள் கொண்டாட்டமும்'' தொடங்கி தீவிர அந்தோணியார் பக்தனாக மாறியவர். வாரத்தின் எல்லா செவ்வாய்க்கிழமையும் திருப்பலியும் நவநாளும் நடத்தி நூற்றுக்கணக்கான மக்கள் அந்தோணியார் வழி செபித்து நன்மைகள் பெற வழி வகுத்தவர். ஏழைகளுக்கு உதவிட 'அந்தோணியார் அப்பம்' என்ற உதவி திட்டம் தொடங்கியவர்.

வயலின்கரை பங்கின் ஒரு அலகான சீனிவிளையை கிளைப் பங்காக மாற்றி பின் அதனை அமலா அன்னை என்னும் பெயரில் ஆலயமாக நிறுவினார்.

21. அருட்தந்தை தோமஸ் கோயிப்புறம் (2002 - 2005)

செறுநிலம் அடிகளார் மறைமாவட்ட நிதிக்காப்பாளராக பொறுப்பேற்றபோது உதவி பங்குத்தந்தையாக பணியாற்றினார். பின்னர் முழுநேர பங்குத் தந்தையாக பணியாற்றினார். சிறந்த முறையில் பாடகற்குழு அமைத்துத் தந்தார்.

22. அருட்தந்தை ஏசுதாஸ் சீரம்பள்ளி (2005 - 2007)

அந்தோணியார் சமூக நலக்கூடத்தின் எஞ்சிய பணிகள் செய்து முடித்தார். இளைஞர் இயக்கத்தை வலுப்படுத்தினார்.

23. அருட்தந்தை ஜேக்கப் ஐயமாத்திர (2007)

மூன்று மாதங்கள் பணியாற்றினார். சமூகக் கூடத்தில் அருட்தந்தை சக்கரியாஸ் அரங்கு அமைத்தார்.

24. அருட்தந்தை ஜேக்கப் முப்பொற்றையில் CST (2008-2009)

புது ஆலயம் அமைத்திட ஆயர் அனுமதி பெற்று ரூபாய் 5 லட்சம் பங்கு மக்களிடமும் பிற மத சகோதரர்களிடமும் வீடு வீடாக சென்று வசூலித்தார்.

25. அருட்தந்தை ஜோசப் தண்ணிப்பாறை CST (2011)

மூன்று மாதங்கள் பங்குத் தந்தையாக இருந்து இளைஞர்களுக்கும் குழந்தைகளுக்கும் இசைக்கருவிகள் பயிற்சி

அளித்து ஒரு சிறந்த பாடகற்குழுவை பங்கில் உருவாக்கினார். இசைக் கருவிகள் வாங்கி பங்கிற்கு சொந்தமாக்கினார்.

### 26. அருட்தந்தை ஜோசப் முட்டத்துக்குந்நேல் (2011-2014)

புத்தாலயம் கட்டும் பணியை கைக்காரர்கள் திரு. செல்லசுவாமி, திரு. மேரின், திரு. குமார் கண்வீனர் திரு. செல்வின் ஆகியோருடன் சேர்ந்து இரவு பகல் பாராது அயராது உழைத்து கட்டி முடித்தார். சாதி மத பேதமின்றி அனைத்து மக்களும் பொருள் உதவி செய்தனர். மறைமாவட்டத்தினுடையவும் பங்கு மக்களின் உதவியுடனும் பாரத நாட்டு அனைத்து மக்களினுடையவும் அரபு நாட்டு மக்களின் உதவியுடனும் கட்டப்பட்ட இறையில்லம் என்ற பெருமை இவ்வாலயத்திற்கு உண்டு. இவ்வாலயம் கட்டிட அனைத்து உதவிகளும் ஒத்தாசைகளும் நல்கி அடிக்கல் நாட்டிய முன்னாள் ஆயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களையும் 26-12-2013 அன்று அர்ச்சித்து ஆராதனைக்கு அர்ப்பணம் செய்த இந்நாள் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களையும் நன்றியுடன் பாராட்டி பங்கு மக்கள் செபிக்கின்றனர்.

### 27. அருட்தந்தை ஜோஸ் இடாட்டுக்காரன் MST (23-05-2014 முதல்)

தற்போதைய பங்குத்தந்தையின் முயற்சியின் பயனால் திட்டங்கனாவிளையில் அந்தோணியார் குருசடி அமைக்கும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் ஆலயத்தில் மணிக்கூண்டு அமைக்கும் பணிகளும் மேற்கொள் ளப்பட இருக்கிறது. வியாழக்கிழமைகளில் காலை 10.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நற்கருணை ஆராதனை பங்குத் தந்தையவர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு வயலின்கரை புனித அந்தோணியார் ஆலயம் இறைபருளாலும் பாதுகாவலர் அந்தோணியாரின் பரிந்துரையாலும் பங்குத் தந்தையர்களின் அயரா உழைப்பாலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துக் கொண்டிருக்கிறது.

திரு. சுகுமாரன்
வயலின்கரை.



# தக்கலை தீபம்-7

## ஏழைகளின் சகோதரிகள் துறவற சபை

"மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கேச் செய்தீர்கள்" (மத் 25:40) என்ற நற்செய்தியை ஏற்று அவ்வார்த்தையால் தூண்டப்பட்டு ஏழைகளுக்கும், ஆதரவற்றோர்களுக்கும், முதியோர்களுக்கும் அடைக்கலம் கொடுக்க தொடங்கப்பட்ட சபையே ஏழைகளின் சகோதரிகள் சபை (SISTERS OF THE DESTITUTE S.D)

**தொடக்கம்...**




சுமார் 87 ஆண்டுகளுக்கு முன் முதியவர்களையோ, ஏழைகளையோ உற்றார் உறவினரால் கைவிடப்பட்டவர்கள், நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், முதுமையடைந்து ஆதரவற்று வாழ்பவர்கள், உடுக்க உடையும், உண்ண உணவும், உறங்க உறைவிடமும் இன்றி தவிப்பவர்கள், இப்படிப்பட்டவர்களை பராமரிக்க எந்த நிறுவனமோ அல்லது அரசோ அக்கறை காட்டாத சூழலில் ஆலுவா தூய மேரி பள்ளியின் நிர்வாகியாக பணியாற்றிக் கொண்டிருந்த அருட்தந்தை வர்க்கீஸ் பையப்பின்னி அவர்களின் மனதில் உதித்தது தான் இந்த ஏழைகளின் அருட்சகோதரிகள் சபை. முதலில் ஆலுவா நகரின் தொலைவில் சுணங்கம்வேலி என்ற கிராமத்தில் முதியோர்களுக்காக இல்லம் அமைத்து, அடைக்கலம் கொடுத்து சேவை மனம் கொண்ட 5 அருட்சகோதரிகளை சேர்த்து அவர்களுக்கான அருட்சகோதரிகள் இல்லமுமாக 1927 ஆம் ஆண்டு மார்ச் 19 அன்று ஏழைகளின் சகோதரிகள்(SD) சபையை நிறுவினார் அருட்தந்தை வர்கீஸ் பையப்பின்னி. இப்படி தொடங்கிய இச்சபை இன்று உலகில் பல

நாடுகளிலும் சேவை புரிந்து வருகிறது.

### குமரியில்...

தக்கலை மறைமாவட்டம் அன்று சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்டத்தின் கீழ் குமரி மிஷனாக செயல்பட்டுக் கொண்டிருந்தது. அன்றைய உயர் மறைமாவட்ட பேராயர் மார் ஆன்றணி படியறா அவர்கள் தன் ஆயர் திருநிலைப்பாடின் வெள்ளிவிழா நினைவாக குமரி மிஷனில் பணியாற்றிக் கொண்டிருந்த அருட்தந்தையர்கள் ஜாண்தெக்கேல், செபாஸ்டின் மஞ்சேரிக்களம் அவர்களுடன் கலந்தாய்வு செய்து முஞ்சிறையில் முதியோர்களுக்காக இல்லம் முடிவு செய்தார். அதன்படி அருட்தந்தை ஜாண் தெக்கேல் அவர்களின் தலைமையில், அன்றைய ஏழைகளின் சகோதரிகள் சபையின் பொது தலைவி அருட்சகோ ஸ்டெல்லா அவர்களின் அனுமதியுடன் முதியோர் இல்லம் பணி தொடங்கப்பட்டது.

### அன்பகம்

1980 ஆகஸ்டு 15 அருட்சகோதரிகள் சீயன்னா, குளோரிஸ்டா ஆகியோர் இருவரும் முதன்முறையாக குமரி மஷினில் அடி எடுத்து வைத்து முஞ்சிறையில் கட்டி நிறைவடையாத கட்டிடத்தில் தங்கி அருட்தந்தை யுடன் கட்டிடப் பணியோடு, பங்குப் பணிகளையும் கவனித்து கொண்டு வந்தனர். இறுதியில் 1980 டிசம்பர் 19 அன்று மார் ஆன்றனி படியறா அவர்கள் ஏழைகளின் சகோதரிகள் இல்லத் தையும், முதியோர்களின் இல்லத்தை "அன்பகம்" என்று பெயரிட்டு ஆசீர்வதித்து திறந்து வைத்தார்.






### சேவைகள்

அன்பகத்தில் முதியவர்களை பராமரிப்பதுடன் சிறு மருந்தகம் அமைத்து சுற்று வட்டாரத்திலுள்ள ஏழை மக்களுக்கு சிகிட்சையும் அளிக்கப்படுகிறது. மறைக்கல்வி, வீடு சந்தித்தல் போன்ற பங்குப்பணிகளோடு, பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் அருட்சகோதரிகள் உழைத்து வருகின்றனர். "ஹெல்ப் ஏஜ் இந்தியா" என்னும் திட்டம் வழியாக சுற்று வட்டார ஏழைகள் மற்றும் முதியோர்களின் ஏழ்மையை போக்கவும் வழி வகை செய்தனர்.

### வாறுதட்டில்...

முதியோர்களின் பாதுகாப்பு மட்டும் போதாது, கல்விப் பணியும் வேண்டும் என்ற அருட்தந்தை ஜாண் தெக்கேல் அவர்களின் சிந்தனையில் வாறுதட்டு ஆரம்பப்பள்ளியில் கல்விப்பணியில் ஈடுபட இரு அருட்சகோதரிகளை நியமித்தார். அவர்கள் அப்பகுதியில் கல்விப்பணியுடன் நற்செய்திப் பணியையும் மேற்கொண்டனர். அருட்சகோதரிகள் இல்லம் இல்லாத காரணத்தால் பணிகளில் தொய்வு ஏற்பட, அப்பகுதியில் அருட்சகோதரிகள் இல்லம் அமைக்கப்பட்டு 1982 ஜூன் 9 அன்று ஏழைகளின் சகோதரிகள் சபையின் இரண்டாவது இல்லம் உதயமானது. அத்தோடு அங்கு நடைபெற்றுவந்த மெழுகுவர்த்தி உருவாக்குதல் தொழிலை மேம்படுத்தி, முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றனர்.

### தமிழகத்தில்...

தக்கலை மறைமாவட்டத்தில் இரு இல்லங்களோடு தமிழகத்தில் ஊட்டி, வேலூர், செங்கல்பட்டு போன்ற மறைமாவட்டங்களிலுமாக 12 அருட்சகோதரிகள் இல்லங்களில் 33 அருட்சகோதரிகள் மறைபணியாற்றி வருகின்றனர். 2009 ஆம் ஆண்டு இவ்வில்லங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு சாந்தோம் வட்டாரம் என்று உயர்த்தப்பட்டு அருட்சகோ.பௌனின் தெரேசு அவர்கள் வட்டார தலைவியாகவும் சென்னை பெரம்பூர் தலைமையிடமாகவும் செயல்பட்டு வருகிறது.

மறைமாவட்டத்திலிருந்து ஏராளமான இளம் பெண்கள் இறையழைத்தல் பெற்று இறைபணியாற்றவும், இறைபணியோடு

சமுதாயப் பணியாற்றவும் சபையின் பாதுகாவலர்கள் தூய சூசையப்பர், தூய வின்சென்ட் தே பவுல், சபை நிறுவனர் இறைஊழியர் அருட்தந்தை வர்கீஸ் பையப்பள்ளி ஆகியோர்களின் பரிந்துரையும் இறைஆசீரும் எம் சபையை வழிநடத்த இறைவனை வேண்டுகிறோம்.

## நற்செய்தி கொண்டாட்டம் 2014

மறைமாவட்ட 14-வது நற்செய்திக் கொண்டாட்டம் டிசம்பர் 5,6,7 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் நடைபெற்றது. அணக்கரை மரியன் தியான மைய இயக்குநரும், குணமளிக்கும் வரம் பெற்றவருமான அருட்தந்தை டோமினிக் வாளமனால் அவர்கள் 5 மற்றும் 7 ஆகிய இரு நாட்களிலும் 6 சனிக்கிழமை மார்த்தாண்டம் இயேசுவைக் காண்போம் குழுவின் சகோ. கிறிஸ்துதாஸ் அவர்கள் தியானச் செய்தி வழங்கி வழி நடத்தினார்கள். ஆராதனை, ஒப்புரவு வழிபாடு, திருப்பலி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் சாட்சி பகிர்வும் நடைபெற்றது. இறைமக்கள் பலரும் கலந்து கொண்டு இறையனுபவமும், ஆசீரும் பெற்றுச் சென்றார்கள். நிறைவு நாளன்று ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு நிதிக்காக அதிக பங்களிப்பு வழங்கிய ஆலயங்களுக்கும், நிறுவனங்களுக்கும் ஆயர் அவர்கள் பாராட்டி வாழ்த்துப் பரிசை வழங்கி சிறப்பித்தார்கள்.



இந்நற்செய்திப்பெருவிழா வெற்றிபெற உழைத்த அனைவருக்கும் நன்றி! நற்செய்தி பெருவிழாவிற்கான பங்களவில் உங்களது பங்களிப்புத் தொகையை ஜனவரி 20-க்குள் மறைமாவட்ட அலுவலகத்தில் ஒப்படைக்க கேட்டுக் கொள்கிறோம்.

அருட்தந்தை மாத்யூ முளங்ஙாசேரி
நிதிக் காப்பாளர்



## வரலாறு அறிவோம் 7

## அருட்தந்தை சிறியக் கூட்டுமேல்



வறுமையின் பிடியில் வாடும் குடும்பங்கள், மூன்று வேளை உணவுக்குப் பதில் ஒருவேளை உணவுகூட இல்லாத அவல நிலை, மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் இவற்றிற்காக போராடும் காலம், கூலி வேலை செய்யும் பாமர மக்கள், கிடைக்கும் வருவாயால் தேவையை நிறைவேற்ற இயலாத நிலை, இதுதான் அன்றைய நம் மக்களின் நிலை, மட்டுமல்ல மின்சாரமோ, போக்குவரத்து வசதிகளோ இல்லாத குக்கிராமங்கள், குழந்தைகளுக்கு கல்வி என்பது எட்டாக் கனி, இப்படிப்பட்ட நிலையில் இருந்த மக்களிடையேதான் நற்செய்தியின் வெளிச்சமாக-விடிவெள்ளியாக-கிறிஸ்துவை பறைசாற்ற இறைவனால் அனுப்பப் பட்டவர்கள் தான் சீரோ மலபார் திருச்சபையின் சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்ட அருட்தந்தையர்கள்.

மஞ்சாலுமூடு பகுதியைச் சுற்றியுள்ள மக்களிடையே இறைபணியாற்றவும் அவர்களுக்குப் புத்துயிர் அளிக்கவும் அருட்தந்தை ஜோசப் மடத்தில் அவர்களிடம் உதவி அருட்தந்தையாக சிறியக் கூட்டுமேல் அவர்கள் இறைபணியாற்றத் தொடங்கினார். அருட்தந்தை அவர்கள் 1939செப்டம்பர் 7 அன்று கேரளாவின் ஆலப்புழ மாவட்டத்தில் நெடுமுடி என்னுமிடத்தில் திரு.ஜேக்கப் மற்றும் திருமதி. திரேசியா தம்பதியினருக்கு பிறந்தார். பள்ளிக் கல்வியை முடித்துவிட்டு இறையழைத்தலை ஏற்று சங்ஙனாச்சேரி

பாறேயில் குருமடத்தில் குருத்துவக்கல்வியை தொடங்கினார். ஆலுவா உயர்குருத்துவக்கல்லூரியில் இறையியலை நிறைவு செய்து 1966 மார்ச் 3 அன்று இறைவனுக்கு தன்னை அர்ப்பணித்து அருட்தந்தையாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

பின்னர் ஆலப்புழ தத்தம்பள்ளி தூய மிக்கேல் ஆலயத்திலும் தொடர்ந்து முட்டார் தூய ஜார்ஜியார் ஆலயத்திலும் உதவி அருட்தந்தையாக குருத்துவப் பணியை தொடங்கினார். இவ்வேளையில் உயர் மறைமாவட்டத்திலிருந்து குமரி மிஷனுக்கு இறைப்பணியாற்ற வர ஆரம்பித்தனர். அதில் நமது அருட்தந்தை அவர்கள் தன்னையும் தயார்படுத்தி 1969 நவம்பர் 9 அன்று குமரி மிஷனின் மஞ்சாலுமூடு பங்கில் அருட்தந்தை ஜோசப் மடத்தில் அவர்களுடன் இணைந்து பணியாற்ற தொடங்கினார்.

தொடர்ந்து முக்கூட்டுக்கல், மாலைக்கோடு ஆகிய இடங்களில் இறை சமூகங்கள் ஆரம்பிக்கப்பட்டு அருட்தந்தை மடத்தில் அவர்களுடன் பணியாற்றினார். பின்னர் 1970 ஆம் ஆண்டு காரோடு மற்றும் மாறப்பாடி இடங்களில் ஆலயங்கள் அமைக்கப்பட்டு இறைபணிக்கு வித்திடப்பட்டது.

பின்னர் அருட்தந்தை அவர்கள் மாலைகோட்டில் தங்கியிருந்து மாறப்பாடி மற்றும் காரோடு ஆலயங்களுக்கு திருப்பலி மற்றும் நற்செய்திப்பணியை செய்து வந்தார்.

இளம் குருவானவராக இருந்த அருட்தந்தை மிகவும் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும், இறைப்பற்றுடனும் அர்ப்பண உணர்வுடனும் இறைபணியில் ஈடுபட்டார். இன்றைய காலத்தைப் போன்று நவீன வசதிகளான தொலைபேசி, அலைபேசி, மின்னஞ்சல் போன்ற எந்தவொரு வசதியும் இல்லாத காலம். எந்த ஒரு செய்தியேனும் மற்றோர் இடத்திற்கு தெரிவிக்க வேண்டுமெனில் கடிதம் வாயிலாகத் தான் தெரிவிக்க வேண்டும். அதுவும் ஒரு நபர் மூலமாக தெரிவிக்க வேண்டிய இடத்திற்கு கொடுத்து அனுப்ப வேண்டும். அந்நபர் கால்நடையாகத் தான் அக்கடிதத்தை உரியவரிடம் ஒப்படைப்பார். இத்தகைய ஒரு நிலையில் தான் அன்றைய நற்செய்திப் பணியானது இறையன்பினால் உந்தப்பட்டு நடைபெற்று வந்தது.

தந்தை அவர்கள் இறைபணிக்கு எவ்வளவு முக்கியத்துவம்



கொடுத்தாரோ அதே அளவு மக்களின் பொருளாதாரம், சுகாதாரம், ஆரோக்கியம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த மக்களை முன்னேற்ற தேனீ வளர்ப்புத் திட்டம், கைத்தறித் தொழில் போன்றவற்றை தொடங்கினார். தேனீ வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேன் பெட்டிகளும், தேனீக்களும் வழங்கப்பட்டன. அவற்றிலிருந்து கிடைக்கும் தேனை கொள்முதல் செய்து நல்ல விலைக்கு விற்று மக்களுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கச் செய்தார்.

ஏழ்மையில் உழலும் பெண்களுக்கு வருவாய் கிடைக்கச் செய்ய தமிழ்நாடு காதிகிராமத் தொழில் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாலை அமைத்து வருவாய் பெருகச் செய்தார்.

வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த மக்கள், போதிய சத்துணவுக்குறைவால் பலவித நோய்களுக்கு ஆளானார்கள். அவற்றில் முக்கியமான ஒன்று காசநோயாகும். இந்நோய் நீங்க மாலைக்கோட்டில் காசநோய்க்கான மருத்துவ முகாம் ஒன்றை தொடங்கி, அதற்கான இடம் வாங்கப்பட்டு நாகர்கோவில் அரசு மருத்துவமனையுடன் தொடர்பு வைத்து அதற்கான மருந்துகளை ஏழை எளிய மக்களுக்கு கிடைக்க வழிசெய்தார். சுமார் 10 ஆண்டுகளாக ஆயிரக் கணக்கானோர் இன, மத வேறுபாடின்றி இக்காச நோய் மருத்துவ மையத்தில் சிகிட்சை பெற்று பயனடைந்தனர்.

தந்தை அவர்கள் ஆலயத்தில் வரும் ஒவ்வொருவருடனும் தனித்தனியாக தொடர்பு கொண்டு அவரவரது பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து அவற்றிற்கு ஆலோசனைகளை வழங்கி வந்தார். திருப்பலிக்குப் பின் ஆலயத்தின் வெளியில் வந்து அனைவரோடும் அளவளாவி அவர்களது இன்ப துன்பங்களைப் பகிர்ந்து அவர்களோடு ஒருமித்து ஒரு குடும்பமாக சிலமணித்துளிகளை செலவிடுவதில் இன்பம் காண்பார். இந்நிகழ்வு அனைவர் மனதிலும் இன்றளவும் நீங்கா இடம் பெற்றிருக்கிறது. இத்தகையதொரு செயல்பாட்டை அருட்தந்தையவர்கள் எப்போதும் தனது வழக்கமாகக் கொண்டிருந்ததால் மக்கள் அவரை கறுப்பர் அச்சன் என அன்புடன் அழைத்தனர். அருட்தந்தையவர்கள் இறைமக்களிடத்தில் ஏதேனும்

குறைகள் காணும்போதும், இறைபணியில் ஏதேனும் தவறுகள் நேர்ந்தாலும் கண்டிக்கத் தவறாதவர்.

அக்காலத்தில் மஞ்சாலுமூட்டில் அதைச் சுற்றியுள்ள ஆலயங்களான முக்கூட்டுக்கல், மாலைக்கோடு, மாறப்பாடி, காரோடு மற்றும் முதப்பன்கோடு ஆலய மக்கள் ஒன்று சேர்ந்து பெரிய வெள்ளியன்று சிலுவைப்பாதை நடத்தி வந்தனர். அனைவரும் கையில் சிலுவை ஏந்தி சாலையில் முழங்காலில் நின்று சிலுவைப்பாதையை தியானிப்பது இயேசுவின் கல்வாரிப்பாதையை நினைவூட்டுவதாக இருந்தது.

ஆரம்பகாலத்தில் திருப்பலியில் செபங்களைச் சொல்லவும், பாடல்களைப் பாடவும் இறைமக்களை பயிற்றுவிப்பது அருட்தந்தையர்கள் தான். இன்றைய காலத்தைப்போல் பாடகர் குழுக்களோ, சிறந்த மறைக்கல்வியோ இல்லை. அருட்தந்தையர்கள் தான் திருப்பலிக்குப்பின் திருப்பலியில் சொல்ல வேண்டிய செபங்களையும், பாடல்களையும் மக்களுக்கு கற்பிப்பார்கள். அருட்தந்தை சிறியக் கூட்டும்மேல் அவர்கள் குருக்கள் எவ்வாறு நல்ல ஆயனாக இருந்து இறைமக்களை நடத்திச் செல்ல வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக செயல்பட்டார். அண்டை மாநிலத்திலிருந்து இங்கு வந்து இறைபணியாற்றி நம்மையெல்லாம் சொந்த மக்களாகவே எண்ணிய மனப்பாங்கு இன்று நினைத்தாலும் நம்மையெல்லாம் நெகிழச் செய்கின்றது.

பெருவாரியான மக்கள் ஓலைக் குடிசையில்தான் வாழ்ந்து வந்தனர். அருட்தந்தையவர்கள் அவர்களுக்கு ஓடு வேய்ந்த வீடுகளைக் கட்டிக்கொடுத்தார். வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவித்தாலும் திருமணச் சந்தையில் வரதட்சனை அரக்கன் அன்றும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தான். அருட்தந்தையவர்கள் அன்று அளித்த வீடுகளையும் விற்று வரதட்சணையாகக் கொடுத்து தங்கள் மக்களுக்கு மணமுடித்து கொடுத்தவர்களும் உண்டு. இவ்வாறு தந்தையவர்களின் உதவி மக்களுக்கு இருவழிகளில் பயன்பட்டது.

*தாய் சேய் நலம்*

ஏழைத் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் நலம் காக்க கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் வழியாக தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கும் திட்டத்தை அனைத்து



ஆலயங்களிலும் தொடங்கினார்.

மத்தேயு நற்செய்தி 14:13-20 வசனங்களில் இயேசுவின் போதனையைக் கேட்டு பசியுற்றிருந்த மக்களுக்கு உணவளிக்கும் நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. அருட்தந்தையவர்களும் மக்களின் பசிபோக்க திருப்பலிக்குப்பின் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் உணவு வழங்கி (கோதுமை, எண்ணெய் மற்றும் பால்) இயேசுவின் போதனையைத் தன் இறைப்பணியிலும் செய்து காட்டினார். இறைமக்களின் அன்றாட பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் அவர் பணியாற்றிய ஆலயங்களில் புனித வின்செண்ட் தே பவுல் சபைகளை நிறுவினார். அக்காலத்தில் வீடுகள் பெரும்பாலானவைகள் ஓலைக் குடிசைகளாகவே காணப்பட்டன. பழைய ஓலைக் கூரைகள் மாற்றப் படாமல் மழைக்காலங்களில் நனையும் வீடுகளைக் காணும் தந்தையவர்கள் புனித வின்செண்ட் தே பவுல் சங்கம் வழி ஓலைகள் வாங்கி புதிய கூரை அமைக்க உதவிசெய்தார். அக்காலங்களில் வின்செண்ட் தே பவுல் சங்கத்தின் முக்கிய வேலைகளில் இதுவும் ஒன்றாக அமைந்திருந்தது. மேலும் ஆரம்பகால மிஷன் வளர்ச்சியில் வின்செண்ட் தே பவுல் சங்கத்தின் செயல்பாடுகள் மிக முக்கியமானதொன்றாக அமைந்திருந்தது. ஏழை மாணவர்கள் கல்விக்கு உதவி செய்தல், நோயாளிகளுக்கு உதவி செய்தல், ஏழைகளுக்கு துணிகள் வாங்கி கொடுத்தல் போன்ற ஏராளமான உதவிகள் வழங்கப்பட்டது.

பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்கு இன்றைக்கு வழங்கப்படுவது போல் சீருடைகள் வழங்கப்படவில்லை. குடும்ப வறுமையின் காரணமாக போதிய துணிகள் கூட இல்லாத நிலையில் அருட்தந்தையவர்கள் மாணவர்களுக்கு உடைகளும் அளித்து உதவினார்.

*மழலையர் பள்ளி*

கிராம மக்களுக்கும் கல்வி கிடைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் எல்லா ஆலயங்களிலும் மழலையர் பள்ளிகளும் தொடங்கப்பட்டன. அருட்கன்னியர்கள் குறிப்பாக SDS கன்னியர்களும் இம்மழலையர் பள்ளிகளை நடத்திச் செல்ல உறுதுணையாக இருந்தனர். இம்மழலையர் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு உணவும் வழங்கப்பட்டது.

கல்வி

எல்லா மாணவர்களையும் பள்ளிக்கு அனுப்புவதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அன்றைய குடும்பச் சூழலில் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப பெற்றோர்கள் மிகச்சிரமப் பட்டனர். தந்தையர்கள் அத்தகையோருக்கு தன்னாலியன்ற உதவிகளை அளித்து அவர்களை பள்ளிக்கு அனுப்பி வைத்தார்.

மாலைக்கோட்டில் மாணவர்களை தங்க வைத்து அவர்களை கற்பித்து அவர்கள் எதிர்காலம் ஏற்றம்காண வகை செய்தார். மேலும் கல்லூரி படிப்பு, ஆசிரியர் பயிற்சி படிப்பு போன்ற உயர்கல்விக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்துப் போன்ற கல்வி பயிலவும் ஏராளம் மாணவர்களுக்கு உதவி அளித்து வந்தார்.

கழுவன்திட்டை

அருட்த்தையவர்களின் இறைப்பணி மாலைக்கோடு, காரோடு மற்றும் மாறப்பாடி போன்ற கிராமங்களிலேயே நடைபெற்று வந்தது. கடைசியாக அருட்தந்தையவர்கள் கழுவன்திட்டையில் ஓர் ஆலயத்தை எழுப்பினார்.

அருட்சகோதரிகள்

இறைபணியில் அருட்தந்தையவர்களுடன் முக்கூட்டுக்கல் திரு இருதய சபை அருட்சகோதரிகள் உறுதுணையாக இருந்தனர். அருட்சகோதரி ஜெயின் மரியா, அருட்சகோதரி கொண்சீலியா ஆகியோர் 1970 முதல் 6 ஆண்டுகள் கால்நடையாக நடந்து சென்று காரோட்டில் இறைபணியாற்றினார்.

மாலைக்கோடு

தூய ஜார்ஜியார் பெயரில் தொடங்கப்பட்ட மாலைக்கோடு ஆலயத்தின் கட்டுமான பணிக்காக நிதி தேவைப்பட கேரளாவின் ஆலப்புழ அருட்தந்தையர்கள் உதவ அவர்களின் வேண்டுகோளின்படி திருச்சிலுவை ஆலயம் என பெயர் மாற்றம் பெற்று தந்தை அவர்களின் பெரும் முயற்சியால் மாலைக்கோடு ஆலயம் கட்டியெழுப்பப் பட்டது. மேலும் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்ய ஏராளமான நிலபுலன்களையும் ஆலயத்திற்கு வாங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரது அயராத உழைப்பு தன்னலமற்ற சேவை, பிறரன்பு, அர்ப்பணம் அனைத்திற்கும் மேல் இறைபற்று இவை அனைத்தும் இன்று நமக்கு வழிகாட்டியாக அமையட்டும். அன்று செய்த தியாகத்தால் குமரி மிஷனாக உருவெடுத்த இறைபணித்தளம் தக்கலை மறைமாவட்டமாக பரிணமித்துள்ளது.

இறுதியாக அருட்தந்தை கூட்டுமேல் அவர்கள் 1989ஆம் ஆண்டு மாலைக்கோட்டிலிருந்து மாற்றலாகி முஞ்சிறை புனித ஜார்ஜியார் ஆலயத்தில் இறைபணியாற்ற தொடங்கினார். அங்கு சுமார் 6 ஆண்டுகள் பணியாற்றிவிட்டு 1995ஆம் ஆண்டு கொல்லம் மறைமாவட்டத்தின் நீண்டகரை சான் ஜோஸ் மையத்தில் இறைபணியாற்றி வருகிறார். தந்தை அவர்களின் பணி சிறக்க இறைவனை வேண்டுவோம்.

திரு. புஷ்ப ராஜ்,
காரோடு.

---

**தக்கலை-பாலா நண்பர்கள் கூட்டம்**

பாலா மறைமாவட்டத்தைச் சேர்ந்த சில நல்லுள்ளம் படைத்தவர்கள், நமது மறைமாவட்டத்திற்காக செபிப்பதோடு சிறு சிறு உதவிகளையும் செய்து வருகிறார்கள். சில மாதங்களுக்கு முன் அவர்கள் நமது மறைமாவட்டத்தைச் சந்தித்தார்கள். சந்திப்பின் இறுதியில் தங்களையே, தக்கலை நண்பர்கள் என பெயரிட்டுக்கொண்டனர். நமது குருகுல முதல்வர், அந்நண்பர்களின் வீடுகளை டிசம்பர் 15, 2014 அன்று சந்தித்து, அவர்களோடு இணைந்து செபித்து அவர்களின் பணியை ஊக்கப்படுத்தினார்கள்.

**திரு இ. கே மாத்யு மறைவு**

கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் தந்தை மாத்யு சஜி இலம்பாசேரில் அவர்களின் தந்தை டிசம்பர் 20 ஆம் தேதி காலமானார்கள். அவருடைய நல்லடக்கச் சடங்கு கண்ணூர், பய்யாவூர், அலெக்ஸ் நகர், தூய ஜோசப் ஆலயத்தில் வைத்து 22 ஆம் தேதி நடைபெற்றது. ஆயரும் குருகுல முதல்வரும் குருக்களும், கல்லுவிளை பங்குமக்களும் சமூக சேவை மையத்தில் பணிபுரியும் ஊழியர்களும் அடக்கச்சடங்கில் பங்கேற்றார்கள்.

# குமரியில் உதயமாகும் குழித்துறை மறைமாவட்டமும் சலேசியன் சபை ஆயரும்



தமிழகத்தின் கோட்டாறு மறைமாவட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதியைக் கொண்டு குழித்துறை என்ற புதிய லத்தீன் மறைமாவட்டத்தை டிசம்பர் 22 அன்று உருவாக்கியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். இப்புதிய மறைமாவட்டத்தின் முதல் ஆயராக சலேசியன் சபையின் 63 வயது அருட்தந்தை ஜெரோம் தாஸ் வறுவேல் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இம்மறைமாவட்டம் 2லட்சத்து 64ஆயிரம் கத்தோலிக்க மக்களைக் கொண்டது. திரித்துவபுரம் மூவொரு இறைவன் ஆலயம் பேராலயமாக கொண்டு 100 பங்குகளும் 123 திருத்தொண்டுதளங்களுமாக மொத்தம் 915சதுர கிலோ மீட்டர் சுற்றளவில் செயல்பட இருக்கிறது.



புதிய ஆயராக நியமனம் பெற்ற அருட்தந்தை அவர்கள் 21 அக்டோபர் 1951 அன்று பிறந்தவர். கோட்டாறு மறைமாவட்டத்தின் படுவூர் பங்கைச் சார்ந்த இவர் பள்ளிக் கல்வியை நாகர்கோவில் கார்மல் உயர்நிலைப்பள்ளியிலும், கல்லூரிக்கு முந்தைய படிப்பை நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியிலும் பயின்றார்.



1968ஆம் ஆண்டு நாகர்கோவில் தூய அலோசியஸ் இளங்குருமடத்தில் சேர்ந்து குருத்துவக் கல்வியை தொடங்கி, தத்துவயியலை பூந்தமல்லி திரு இருதய குருமடத்தில் 1973ல் நிறைவுசெய்தார். பின்னர் 3 ஆண்டுகளுக்குப்பின் நோவ்சியேட் கல்வி பயின்று நிறைவு செய்து சலேசியன் தொன்போஸ்கோ துறவற சபையில் சேர்ந்து 1978ல் முதல் வார்த்தைப் பாட்டை ஏற்றார். 1978ல் நித்திய வார்த்தைப் பாட்டை ஏற்று பின் உரோமையிலுள்ள சலேசியன் சபை போன்டிபிக்கல் பல்கலைகழகத்தில் இறையியலை 1985ல் நிறைவு செய்தார். தூய இரண்டாம் ஜாண்பால் திருத்தந்தை அவர்களால் 1985 ஜீன் 2 அன்று வத்திக்கானில் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்ட இவர் தற்போது சென்னை மாகாண சலேசிய சபையில் பணியாற்றி வருகிறார்.

புதிய ஆயராக நியமிக்கப்பட்ட அருட்தந்தையின் ஆயர் திருநிலைப்பாடு மற்றும் மறைமாவட்ட தொடக்க விழா ஜனவரி 24 அன்று சித்தரங்கோட்டில் நடைபெறுகிறது.

---

**புலரி அச்சகத்தில் அச்சுப் பணி தொடங்கியது......**



மறைமாவட்ட அச்சக நிறுவனமான புலரி அச்சகம் கடந்த ஆகஸ்ட் முதல் வடிவமைப்புப் பணிகளை செய்து கொண்டு வந்தது. தற்போது இயந்திரங்கள் அனைத்தும் புனரமைக்கப்பட்டு நவீன முறையில் செயல்பட தொடங்கி யுள்ளது. அச்சுப் பணியை ஜனவரி 1 அன்று காலை ஆயர் அவர்கள் அர்ச்சித்து தொடங்கி வைத்தார்கள். வடிவமைப்புப் பணிகளோடு தற்போது அச்சுப் பணியும் நடைபெற்று வருகிறது. இந்நிறுவன வளர்ச்சிக்கு மறைமாவட்ட மக்கள் அனைவருடைய ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

அருட்தந்தை ஜினோயி தோமஸ்,
இயக்குநர்.